වාර්ෂික වාර්තාව
ஆண்டறிக்கை
ANNUAL REPORT 2022

1990 සුව සැරිය පදනම
1990 சுவசெரிய அறக்கட்டளையின்
1990 SUWA SERIYA FOUNDATION

ஆண்டறிக்கை
2022



1990 சுவசெரிய அறக்கட்டளை

பொருளடக்கம்

செயற்பணி, தொலைநோக்கு மற்றும் குறிக்கோள் 2
நிறுவனத் தகவல்கள் 3
தலைவர் அவர்களின் செய்தி 5
தலைமை நிறைவேற்று அதிகாரியின் அறிக்கை 8
நிறுவனத்தின் நிருவாக அறிக்கை 9
கணக்காய்வு குழு அறிக்கை 10
தொழிற்பாடு செயற்பாடுகள் 12
அன்பளிப்புகள் 15
மக்கள் விழிப்புணர்வு 16
நிதிசார் செயல்திறன் 17
கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் 17
நிதிநிலை அறிக்கை தொடர்பான தலைமை கணக்காய்வாளரின் அறிக்கை 33

செயற்பணி, தொலைநோக்கு மற்றும் குறிக்கோள்

1990 சுவசெரிய அறக்கட்டளையின் செயற்பணி, தொலைநோக்கு மற்றும் குறிக்கோள்,

"உயிரை காப்பாற்றுதல"

என்ற ஒரே குறிக்கோளை மட்டும் முதன்மையாகக்கொண்டு தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதன் எந்தவொரு அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் என்பவற்றால் மேலும், எத்தகைய எண்ணிக்கையிலான உயிர்களைப் பாதுகாக்க முடியுமென்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படுகிறது.



நிறுவனத் தகவல்கள்

சட்டத்துடனான கட்டமைவு

1990 சுவசெரிய அறக்கட்டளை தாபிக்கப்படுவதற்கான வர்த்தமானிப் பத்திரம் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி அரசாங்கத்தால் வெளியிடப்பட்டு, 2018 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க 1990 சுவசெரிய அறக்கட்டளை சட்டமாக வலுவூட்டப்பட்டது.

பதிவு அலுவலகம்

இலக்கம். 415, கோட்டை வீதி, ராஜகிரிய, இலங்கை

இயக்குனர் குழு

நியமனம் பெற்ற இயக்குனர்கள்

திரு. துமிந்திர ரத்நாயக்க – கூட்டத்தலைவர்

திருமதி. சந்தியா சல்காது

பேராசிரியர். அசித த சில்வா

திரு. விஜய மலலசேகர (2022.02.15 வரை)

திரு. விஷ் கோவிந்தசாமி (2022.06.07 தொடக்கம்)

பிரதிநிதியாளர்கள்

பதவிவழி நியமனம் பெற்ற நிதி அமைச்சு செயலாளரின் பிரதிநிதியாளர :

திருமதி. சம்பிகா பதிரண (2022.02.27 வரை)

திருமதி. சந்திரிகா குலதிலக (2022.02.28 தொடக்கம்)

பதவிவழி நியமனம் பெற்ற சுகாதார அமைச்சு செயலாளரின் பிரதிநிதியாளர் :

வைத்தியர். சுனில் த அல்விஸ்

பதவிவழி நியமனம் பெற்ற பொலிஸ் மா அதிபரின் துணை பிரதிநிதியாளர் :

DIG திரு. இந்திக ஹபுகொட

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம்

வங்கிகள்

இலங்கை வங்கி, நிறுவனக் கிளை

தலைமை முகாமைத்துவ பதவியணி

பிரதான நிறைவேற்றலுவலர்	:	திரு. சொஹான் த சில்வா
பிரதான மருத்துவ அலுவலர்	:	வைத்தியர். ஸ்ரீலால் த சில்வா
மனித வளங்கள் மற்றும் நிருவாக தலைவர்	:	திருமதி. கயத்திரி த சில்வா
பயிற்சி மற்றும் இணைப்பு தலைவர்	:	திரு. கயான் சதுரங்க
அவசர கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டு நிலைய (ECCC) தலைவர்	:	திரு. மிராஜ் விஜேசேகர
பதில் கடமையாற்றும் தலைமை வழங்கல் மற்றும் முகாமைத்துவ அதிகாரி (SCM)	:	திருமதி. சாமிகா ஹெட்டிஆரச்சி
செயல்பாட்டு முகாமையாளர்	:	திரு. சசிரு ரத்நாயக
வாகன பராமரிப்பு முகாமையாளர்	:	திரு. ரோஹன வீரசிங்க
தர முகாமையாளர்	:	செல்வி. ஷெரின் ஜொன்சன்
பிராந்திய முகாமையாளர்கள்	:	திரு. காமிணி குமார, திரு. ஆர். கோபிநாத்

தலைவர் அவர்களின் செய்தி

2022 ஆம் ஆண்டிற்கான இந்த வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தலானது. 1990 சுவசெரிய முன் மருத்துவமனை சிகிச்சை நோயாளர் வண்டி சேவையினது அயராத பங்களிப்பின் ஆறு ஆண்டுகளின் வெற்றிகரமான நிறைவை குறிக்கின்றது. கோவிட்-19 தொற்றுநோய் காணரமாக ஏற்பட்ட பல சவால்களை வெற்றிகரமாக எதிர்நோக்கியே நாம் 2022 ஆம் ஆண்டிற்குள் பிரவேசித்தோம். 1990 சுவசெரிய அறக்கட்டளை நாட்டில் கோவிட்-19 தொற்றுநோயை முகாமைத்துவம் செய்வதற்கு அரசாங்கத்தால் மேற்கொண்ட முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஒரு வலுவான தூணாக காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டை பின்னோக்கும் போது, எரிபொருள் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை போன்ற சவால்கள் நிறைந்த ஆண்டாக அமைந்திருந்தது. இருந்தபோதிலும், நாம் எமது பங்குதாரர்களின் நலனுக்காக சிறந்த சேவையை வழங்கும் நோக்கத்தை முதன்மையாகக்கொண்டு செயற்பட்டோம்.

எதிர் நோக்கிய சவால்களை வெற்றிக்கொள்வதற்கும், இலங்கை மக்களுக்கு வினைத்திறனுடன் கூடிய முன் மருத்துவமனை அவசர சிகிச்சை நோயாளர் வண்டி சேவைகளை வழங்குவதற்கும் ஒத்துழைப்பு மட்டுமல்லாது அர்பணிப்பு முயற்சி என்பவற்றுடன் செயற்பட்டமைக்காக 1990 சுவசெரிய அறக்கட்டளையின் ஊழியர்களிடம் நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

துமிந்திர ரத்நாயக்க
கூட்டத்தலைவர்
1990 சுவசெரிய அறக்கட்டளை

திரு. துமிந்திர ரத்நாயக்க

திரு. துமிந்திர ரத்நாயக்க விஞ்ஞான இளங்கலை (இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல்) பட்டம் பெற்றவர், மேலும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் உறுப்பினராகவும் உள்ளார். அவர் செல்டெல்/டீகோ மற்றும் எடிசலாட் என்பவற்றின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரியாகவும், தனியார் நிறுவனங்களினது இயக்குனர் குழுக்களிலும் பல பதவிகளையும் வகிக்கின்றார். இதற்கு மேலதிகமாக அவர் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் ICTA இயக்குனர் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளதுடன், இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் பதவியும் வகித்துள்ளார். 2018 ஆம் ஆண்டில் திரு.துமிந்திர 1990 சுவசெரிய அறக்கட்டளையின் ஆரம்ப தலைவராக நியமனம் பெற்றதுடன், தற்போது நாட்டின் மிக வினைத்திறனுடன் பராமரிக்கும் அரச அமைப்பாக சுவசெரியவின் முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாடுகளை அவரால் வழிநடாத்தப்படுகிறது.

வித்யா ஜோதி பேராசிரயிர். அசித்த த சில்வா

பேராசிரியர் அசித்த வடக்கு கொழும்பு மருத்துவக் கல்லூரயில் மருத்துவ பட்டம் பெற்றுள்ளதுடன், ஒக்ஸ்பர்ட் ரெட்க்ளிப் மருத்துவமனையில் க்ளினிக் மருந்தியல் துறையில் முதுகலைப் பயிற்சியையும் பெற்றுள்ளார். பேராசிரியர் அசித்த களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் மருத்துவ மருந்தாளரும், மருந்தியல் தொடர்பான சிரேஷ்ட பேராசிரியரும் ஆவதுடன், களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பரிசோதனைப் பிரிவின் இயக்குனரும் ஆவார். அவர் லண்டனின் ரோயல் மருத்துவ கல்லூரியின் உறுப்பினராவார். அவர் நேற நுபெடயனெ துழரசயெட ழக ஆநனஉைநெஇ டுயஎெநவஇ துயுஆயுஇ ஊடனைஉையட ளுஉநைஎெந யனெ ளுவசழமந மற்றும் "டுழள ஆநனஉைநெ போன்ற பல அறிவியல் சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளார். 2019 ஆம் ஆண்டில், அறிவியலுக்கான அவரது மதிப்புமிக்க பங்களிப்பிற்காக பேராசிரியர் அசித்தவுக்கு தேசிய கௌரவ வித்யா ஜோதி விருது வழங்கப்பட்டது.

திருமதி சந்தியா சல்காது

திருமதி சந்தியா, களனிப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டத்தையும், அவுஸ்திரேலியாவின் எடித் கோவன் பல்கலைக்கழகத்தில் முதுகலை வியாபார நிர்வாகப் பட்டத்தையும் (ஆடீயு) (சர்வதேசம்) பெற்றுள்ளார். மேலும் ஐக்கிய இராச்சயத்தின் (ருமு) பட்டயம் பெற்ற சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் (ஆஉளஐஆ) உறுப்பினராகவும் உள்ளார். ழுபடைஎல யுஉவழைஎ இல் இயக்குனர்/தலைமை நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றியுள்ள திருமதி சந்தியா, உலக வங்கியின் நிதியுதவியுடன் இலங்கையில் பல திட்டங்களுக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கிய அனுபவமிக்க தகவல் தொடர்பு நிபுணர் மற்றும் வர்த்தக ஆலோசகர் ஆவார். 2018/19 இல் றுழஅநெ ஸை ஆயயெபநஅநவெஇ ஐகுஊ மற்றும் யுரளவசயடனையெ யுனை ஆகியவற்றால் வழங்கப்பட்ட "றுழஅயஎ ழக ளைலிசையவழைஎ" உள்ளிட்ட பெரும்பாலான பதவிப் பெயர்களில் கொளரவப்படுத்தப்பட்டுள்ளார். தற்போது, அவர் இலங்கையில் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (ருகூயு) /சுகாதார அமைச்சின் ஆலோசகராக பணியாற்றுகிறார்.

திரு. விஷ் கொவிந்தசாமி

திரு. விஷ் அவர்களால் மின் பொறியியல் தொடர்பான அறிவியல் இயங்கலை பட்டப்படிப்பு மற்றும் அமெரிக்க ஐக்கிய குடியரசின் ர்யசவகழசன பல்கலைக்கழகத்தின் வியாபார நிருவாக முதுகலை பட்டம் (ஆடீயு) பெற்றுள்ளார். இலங்கை வர்த்தக சபையின் தலைவர், இலங்கை தொழில்தருநர் சம்மேளனம், இலங்கையின் இயக்குனர் சபை உறுப்பினர், வர்த்தக சேவை சேமலாப நிதியத்தின் குழு உறுப்பினர், இலங்கை மருந்து கைத்தொழில் சபையின் முன்னாள் தலைவர் என்ற வகையில் வர்த்தக துறையில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். கைத்தொழில் துறையில் இந்து- இலங்கை வர்த்தக சபையின் முன்னாள் தலைவரும் ஆவார். தற்போது விஷ் அவர்கள் சன்ஸயின் ஹோல்டிங்ஸ் பீ.எல்.சீ. (CSE:SUN), வட்டவல பெருந்தோட்டக் கம்பெனி, வட்டவல பால் உற்பத்தி கம்பெனி, சன்ஷயின் வில்மா தனியார் கம்பெனி, டாஜ் லங்கா ஹோடேல்ஸ் மற்றும் சொப்ட்லொஜிக் ஆயுட் காப்புறுதி கம்பெனியின் இயக்குனர்/தலைவர் போன்ற பதவிகளை வகிக்கின்றார்.

மருத்துவர் சுனில் த அல்விஸ்

மருத்துவர் சுனில் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் மருத்துவ இயங்கலை மற்றும் சத்திரசிகிச்சை தொடர்பான பட்டப்படிப்பு முடித்துள்ளதுடன், அவர் விஞ்ஞான முதுகலை (சமூக மருத்துவவியல்), மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான கலாநிதி பட்டம் (மருத்துவ நிருவாகம்) பெற்றுள்ளார். அவர் களனிய பல்கலைக்கழகத்தில் வியாபார நிருவாகம் தொடர்பான முதுகலை பட்டமும், வயம்ப பல்கலைக்கழகத்தில் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமாவும் பெற்றுள்ளார். மருத்துவர் திரு.சுனில் மருத்துவ அலுவலராக பணியாற்றியுள்ளதுடன், 1997 ஆம் ஆண்டில் மருத்துவ அதிகாரியாக தரமுயர்வு பெற்று மருத்துவ நிருவாக சேவையில் சேர்ந்துள்ளார். அதன் பின்னர் 2001 ஆம் ஆண்டு வடமேல் மாகாண சுகாதார சேவை மாகாண இயக்குனராக தரமுயர்வு பெற்று 2012 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சின் சுகாதாரம், போஷாக்கு மற்றும் உள்நாட்டு மருத்துவ பிரதி இயக்குனராக நியமனம் பெற்றார். தற்போது மருத்துவர் திரு.சுனில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளராக (மருத்துவ சேவை) கடமையாற்றுகின்றார்.

திருமதி சந்திரிக்கா குலதுங்க

திருமதி சந்திரிக்கா ஸ்ரீ ஜயவர்த்தபுர பல்கலைக்கழகத்தின் வர்த்தக துறையில் பட்டப்படிப்பு மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா பெற்றுள்ளார். அவர் தபால் திணைக்களத்தின் கணக்காளராகவும், கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தில் கணக்காய்வு அதிகாரியாகவும், அரச கணக்கு திணைக்களத்தின் பிரதி இயக்குனர் மற்றும் இயக்குனராகவும், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் இயக்குனராகவும் பணியாற்றி உள்ளதுடன், தற்போது அவர் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் இயக்குனர் நாயகமாக கடமையாற்றுகின்றார்.

பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. இந்திக்க ஹப்புகொட

திரு. இந்திக்க அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள ஏனைய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுக்கிடையில் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவளை கல்லூரியில் வழங்கல் முகாமைத்துவம் தொடர்பான வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டமும் (ஆடீயு) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் குற்றவியல் தொடர்பான டிப்ளோமாவும் பெற்றுள்ளார். 1998 ஆம் ஆண்டில் உப பொலிஸ் பரிசோதகராக இலங்கை பொலிஸ் திணைக்களத்திடம் சேர்ந்த திரு.இந்திக 2021 ஆம் ஆண்டில் பிரதி பொலிஸ் மா அதிபர் பதவியில் நியமனம் பெற்றதன் பின்னர், தற்போது போக்குவரத்து நிருவாகம் மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான பிரதி பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுகின்றார். அவர் 2008-2010 தொடக்கம் கிழக்கு டிமோரில் ஐக்கிய நாடுகளின் அமைதிப் படையில் கடமைகளை மேற்கொண்டுள்ளார். அவர் இந்தியா, சீனா, தாயிலாந்து, வியட்நாம், சிங்கப்பூர் மற்றம் அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெற்ற பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்குபற்றியுள்ளார்.

தலைமை நிறைவேற்று அதிகாரியின் அறிக்கை

2022 என்பது கோவிட்-19 தொற்றுநோயால் பெரும்பாலான சவால்களை வெற்றிகரமாகச் சமாளிப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகளால் நாம் சோர்வடைந்துவிட்ட ஆண்டாகும். இந்த ஆண்டு முழுவதும், நாம் மருந்து தட்டுப்பாடு மற்றும் கடுமையான எரிபொருள் நெருக்கடியை எதிர்கொண்டோம். எவ்வாறாயினும், சுகாதார அமைச்சின் நலன் விரும்பிகள் மற்றும் நன்கொடையாளர்களின் ஆதரவுடன் இயன்றவரை நிலைமையை சமாளித்தோம் என்று நாங்கள் நம்புகின்றோம். எரிபொருள் நெருக்கடியின் உச்சக்கட்டத்தில் கூட, பொதுமக்களின் உயிரைக் காப்பாற்றும் வகையில் ஒரு நாளைக்கு ஏறத்தாழ 1700 நிகழ்வுகளைக் கையாளுவதற்கு எமக்கு முடிந்தது.

இந்த இக்கட்டான காலங்களில் எங்கள் நோயாளர் வண்டி சேவைகளை தொடர்ந்து பராமரிப்பதற்கு மேற்கொண்ட முயற்சிக்காக 1990 சுவசெரிய அறக்கட்டளையின் அனைத்து குழு உறுப்பினர்களுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், எனது கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழுவிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோஹான் த சில்வா
தலைமை நிறைவேற்று அதிகாரி
1990 சுவசெரிய அறக்கட்டளை

தலைமை நிறைவேற்று அதிகாரியின் விவரக் குறிப்புகள்

திரு. சொஹான் த சில்வா 1990 முதல் சுவசெரிய அறக்கட்டளையின் முதலாவது மற்றும் தற்போதைய தலைமை நிர்வாக அதிகாரி ஆவார். உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தகவல் தொழில்நுட்பத் துறையில் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், திரு. சொஹான் த சில்வா டிஜிரல் மாற்றம் அத்துடன், தொழில்நுட்பம் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு நடைமுறைப்படுதல், செயற்பாடுகளின் முகாமைத்துவம் மற்றும் தொழில்பாட்டு முகாமைத்துவம் போன்றவற்றில் நிபுணர் ஆவார். 2018 ஆம் ஆண்டில் அவர் 1990 சுவசெரிய அறக்கட்டளையின் பிரதான நிறைவேற்று அதிகாரி என்ற பதவியில் அடியெடுத்து வைத்தார். அவர் மென்பொருள் பொறியியலில் இளங்கலை அறிவியல் (சிறப்பு) மற்றும் ஆஸ்திரேலியாவில் வியாபார நிர்வாகம் தொடர்பான முதுகலை (ஆடீயு) பட்டம் பெற்றுள்ளார். அவசர மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகிய தொழில்நுட்ப முன்னேற்றத்தை இணைக்கும் அவரது ஆர்வம் மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் கனடா மற்றும் அமெரிக்காவில் உள்ள புகழ்பெற்ற நிறுவனங்களில் இடர் முகாமைத்துவம் தொடர்பான பல தகுதிகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. திரு. சொஹான் த சில்வா பிரித்தானியா கணினி சங்கத்தில் மற்றும் அவசர சந்தர்ப்ப முகாமைத்துவம் தொடர்பான கைத்தொழில்களை அடிப்படையாகக்கொண்டு பல சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

நிறுவனத்தின் நிருவாக அறிக்கை

இயக்குநர்கள் குழு

1990 சுவ செரிய அறக்கட்டளையின் செயற்பாடுகள், நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பன முகாமைத்துவ இயக்குனர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1990 சுவசெரிய அறக்கட்டளையின் இயக்குநர்கள் குழு அர்ப்பணிப்புடன் கூடிய நபர்களை கொண்டமைந்துள்ளது. இக்குழுவானது ஏழு உறுப்பினர்கள் அதாவது, சுகாதார அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தி பதவிவழியில் நியமனம் பெறுகின்ற மூன்று உறுப்பினர்களையும், மருத்துவவியல், மருத்துக்களின் வைத்திய தொழில்நுட்பம், நிதி முகாமைத்துவம், நிருவாகம் அல்லது சட்டம் ஆகிய துறைகளில் கல்வி அல்லது தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள, அனுபவம் வாய்ந்த சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்படுகின்ற மேலும் நான்கு உறுப்பினர்களையும் கொண்டமைந்துள்ளது. இந்த உறுப்பினர்கள், 2018 ஆம் ஆண்டில் சுவ செரிய அறக்கட்டளையின் ஆரம்பம் தொடக்கம் நாட்டில் சிறந்த சேவை வழங்கும் நிறுவனமாக்குவதற்கு தேவையான வழிகாட்டல், ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கி கௌரவமானதும் ஆற்றலுடன் கூடியதுமான சேவையை இயக்குநர்கள் குழு வழங்குகின்றனர். தேவைக்கமைவாக ஒழுங்கமைக்கப்படும் எந்தவொரு மேலதிக சிறப்பு கூட்டங்களுடன், சபை ஒருமாத கால இடைவெளியில் கூட்டங்களை நடாத்துவதுடன், மீளாய்விற்கான காலப்பகுதியில் ஒன்பது கூட்டகள் நடைபெற்றுள்ளன.

கணக்காய்வு குழு கூட்டங்கள்

“நல்லாட்சிக்கான அரச தொழில்முயற்சி வழிகாட்டல்” மற்றும் அரச நிதி சுற்றறிக்கையின் கணக்காய்வு குழு தாபிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு குழுவானது, சுவ செரிய அறக்கட்டளையால் நியமனம் செய்வதுடன், சுவ செரிய அறக்கட்டளையின் மூன்று இயக்குனர்களைக் கொண்டமைந்திருக்கும் நிதி அமைச்சினால் நியமிக்கப்படடவரே இயக்குனர்கள் குழுவின் தலைவராக பணியாற்றுவார். கணக்காய்வு குழு சுயாதீனமாக சுவ செரிய அறக்கட்டளையின் செயற்பாடுகளை பரிசோதனைக்கு உட்படுத்தி மதிப்பீடு செய்கின்றது. மீளாய்விற்கான காலப்பகுதியில் மூன்று குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. கணக்காய்வு குழுவின் கூட்ட அறிக்கை 10-11 ஆவது பக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன.

உள்ளக கட்டுப்பாடு

அறக்கட்டளையின் அனைத்து செயல்பாடுகளும் முறையாக அங்கீகரிக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்ட மற்றும் அறிக்கையிடப்பட்டவை என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட உள்கட்டுப்பாட்டு முறையை அறக்கட்டளை பராமரிப்பதை உறுதிசெய்யும் பொறுப்பு இயக்குனர்கள் குழுவிற்கு உள்ளது. செயல்பாட்டு நிறுவன அமைப்பானது, மனித வளங்கள் மற்றும் நிர்வாகம், நிதி மற்றும் ளுஉஊஆ, நுஉஊஉஊ, செயல்பாட்டுத் துறை, வாகனம் மற்றும் வாகன பராமரிப்பு துறை, பயிற்சி மற்றும் நெறிமுறை மற்றும் தரம் ஆகிய வடிவமைக்கப்பட்ட பிரிவுகளுக்கான வரையறுக்கப்பட்ட செயல்பாடுகளுடன் செயல்பாட்டில் உள்ளது. ஒவ்வொரு துறையின் தலைவர்களும் நேரடியாக அறக்கட்டளையின் தலைமை நிர்வாக அதிகாரிக்கு அறிக்கை செய்கிறார்கள்.

கணக்காய்வு குழு அறிக்கை

கணக்காய்வு குழு அத்தியாவசியமாக நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புகள், இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக, வெளியக கணக்காய்வு பணிகள் போன்ற துறைகளில், முகாமைத்துவ சபையிடம் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக மூலோபாய கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுகின்ற குழுவாகும். கணக்காய்வு குழுவின் தலைமைத்துவம் இயக்குனர் ஒருவர் மேற்கொள்வதுடன், மேலும் இயக்குனர்கள்ஒ இரண்டு பேர்களும் அடங்குவார்கள். குழுவிடம் சிரேட்ட உதவி பதவியணியிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்கப்பெறுவதுடன், குழுவின் கடமைகளை பயனுள்ள வகையில் நிறைவேற்றுவதற்கு போதியளவு நிதி மற்றும் கணக்காய்வு நிபுணத்துவம் உள்ளது.

கணக்காய்வு குழுவின் கடமைப்பொறுப்புகள்

கணக்காய்வு குழு சாசனம்

பொது தொழில்முயற்சிகள் கணக்காய்வு குழுக்கள், பொது திறைசேரியால் வழங்கப்படுகின்ற 01.ஃ.2021 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றுநிருபம் மூலம் நிருவகிக்கப்படுகிறது.

பிரதாண பணி

கணக்காய்வு குழு அடிப்படையில் சுவ செரிய அறக்கட்டளையின் நிதி அறிக்கையிடல் செயற்பாடுகள் மற்றும் தொழில்பாடுகள் தொடர்பாக சுயாதீன மற்றும் சாட்சிகளின் ஆய்வினை வழங்கியதன் பின்னர், சபையிடம் அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மீது கவனம் செலுத்துகின்றது.

குழுவின் கூட்டங்கள்

2022.12.31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டில் 03 செயற்குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. குழு கூட்ட அறிக்கைகளை குறிப்பு வைத்து இயக்குனர் சபையிடம் அறிக்கையிடப்பட்டது. கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதியாளராக கணக்காய்வாளர் அதிபதி கூட்டங்களில் பங்குபற்றினார். நிரல் வரிசை அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் அழைப்பில் உறுப்பினர்கள் கூட்டங்களில் பங்குபற்றினார்கள்.

2022 ஆண்டின் முதலாவது கூட்டத்திற்கு முன்னர் செயற்குழு கட்டமைவில் மாற்றம் ஏற்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டங்களில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களின் விபரங்கள் பின்வருமாறாகும்.:

இயக்குனரின் பெயர்	குழுவின் வகிப்பாகம்	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திருமதி சம்பிகா பத்திரண	தலைவர்	0/0 (21.02.2022 வரை)
திருமதி சந்திரிக்கா குலதிலக்க	தலைவர்	3/3 (28.02.2022 தொடக்கம்)
மருத்துவர் சுனில் த அல்விஸ்	உறுப்பினர்	2/3
திருமதி சந்தியா சல்காது	உறுப்பினர்	2/3

2022 ஆண்டில் குழு;

- 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் அதிபதியின் முகாமைத்துவ கடிதங்களை மீளாய்வு செய்து, எழுப்பிய கணக்காய்வு ஐயப்பாடுகளின் பொருட்டு வழங்கியுள்ள பதில்களை ஆய்வு செய்து, அதில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட விதிகள், ஒழுங்குமுறை மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு ஒழுங்கமையாமை, குறைப்பாடுகளை செவ்வையாக்குவதற்கு மேற்கொள்வதற்கு முடியுமான செயற்பாடுகளை கவனத்தில் கொள்ளப்பட்டது.
  கணக்காய்வு மகாமைத்துவ கடிதங்களின் பின்னாய்வு செயற்பாடுகளாக,
  - மருத்துவ வழங்கல் பிரிவின் பெறுகை திட்டம் பிரகாரம், எமது வருடாந்த மருந்துகள் மற்றும் நுகர்வு தேவைகளை உள்ளடக்குவதற்கு மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து மருந்துகள் பெற்றுக்கொள்வதை பின்னாய்வு செய்து, மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து மருந்து பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
  - புதிய 25 டொயோடா நோயாளர் வண்டிகளை பயன்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிரல் வரிசை அமைச்சு மற்றும் திறைசேரியின் வரவு செலவு திணைக்களத்துடன், கலந்துரையாடப்பட்டு நிதி அமைச்சிடமிருந்து மூலதன செலவின வரவு செலவு ஒதுக்கீடுகளை நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது.

- நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பாக சபையிடம் பரிந்துரைகளை முன்வைத்தல்.
  - 1990 சுவசெரிய அறக்கட்டளை தாபிப்பதற்கு முன்னர் நிகழ்ந்த மீள அறவிட முடியாத ரூபா.மில்லியன் 2.5 ஆன தொகை 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளிலிருந்து சீராக்குவதற்கும் பின்னணி ஆய்வு செய்தலும் தொடர்பான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு குழு நியமனம் செய்தல்.

- 2022 ஆம் ஆண்டில் மனத்தால் நிறைவேற்றப்பட்ட தொழில்பாட்டு பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், குழுவின் பரிந்துரைகளுக்கமைவாக முகாமைத்துவத்தால் தீர்மானங்களை மேற்கொண்டதன் பின்னர் பின்னாய்வு நடவடிக்கைகள் பற்றி மீளாய்வு செய்யப்பட்டது.
  - 2022 ஆண்டுக்காக அரசாங்கத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் வரவு செலவு தேவைகளுக்கு போதுமற்ற காரணத்தால் தேசிய வரவு செலவு திணைக்களத்துடன், கலந்துரையாடல்களை ஆரம்பித்து 2022 ஆண்டுக்கான மேலதிக வரவு செலவு ஒதுக்கீடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.
  - சுவ செரிய அறக்கட்டளையிலிருந்து ஊழியர்களை அகற்றுவதனால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.
  - ஊழியர் பதவியணி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அதிகரித்தல் தேவை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

வெளியக கணக்காய்வு

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியை வெளியக கணக்காய்வாளராக நியமனம் செய்யப்பட்டது. கணக்காய்வாளர் அதிபதியால் நியமனம் செய்யப்பட்ட கணக்காய்வாளர் அதிகாரி மற்றும் அவரது பதவியணி, சுவ செரிய அறக்கட்டளையின் வெளியக கணக்காய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்கின்றார்.

முடிவு

கணக்காய்வு குழுவின் அபிப்பிராயம் யாதெனில், செயற்குழுவினால் தீர்மானிக்கப்படும் விடயங்கள் மற்றும் ஏனைய அனைத்து முக்கியமான பிரிவகளினதும் விடயங்களை உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதாகும்.


கணக்காய்வு குழுவின் பொருட்டு,

சந்திரிக்கா குலதிலக்க
தலைவர் - கணக்காய்வு குழு
2023 மார்ச் 20

தொழிற்பாடு செயற்பாடுகள்

கிடைக்கப்பெற்ற அழைப்புகளின் எண்ணிக்கை

2022 ஆம் ஆண்டில்	ஆரம்பம் தொடக்கம்
1,219,020	5,936,294



அவசர செயற்பாடுகளில் ஈடுபடும் 25 அலுவலர்கள் மூலம்*

கையாளப்பட்ட அவசர சந்தர்ப்பங்கள

2022 ஆம் ஆண்டில்	ஆரம்பம் தொடக்கம்
344,623	1,385,817



அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர்கள் 648 பேர் மற்றம் 574 நோயாளர் வண்டி சாரதிகள் மூலம் *

*2022.12.31 ஆம் திகதியில் பதவியணி




நாடுமுழுவதும்
கி.மீ. 9,871,739
ஈடு செய்யப்பட்டுள்ளது.

பதில் நடவடிக்கை
மேற்கொள்ளும்
சராசரி காலம்
14 நிமிடங்களம் 32
வினாடிகளும்.



அசவர சந்தர்ப்பங்கள் நாடு முழுவதும் பரவலாக்கம்



அன்பளிப்புகள்

கடந்த ஆண்டில் எதிர்நோக்கிய சிரமங்களைச் சமாளிப்பதற்காக 1990 சுவசெரிய அறக்கட்டளைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு பல்வேறு தரப்புகள் முன்வந்தன. இருதய நோய் நிபுணர்களின் நிறுவனம் மற்றும் ஏனைய நலன்விரும்பிகளின் நிதியத்திலிருந்து ரூபா. 2,026,047.49 தொகை கிடைக்கப்பெற்றது. மேலும், மருந்து, மருத்துவ நுகர்வு பொருட்கள் மற்றும் டயர், இந்திய மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்றதுடன், மருத்துவ உதவிகள் இலங்கை - ஒன்டாரியோ, கணடா, கட்டாரில் இலங்கை வாழ் மக்கள், ஐக்கிய குடியரசு அன்பளிப்பாளர்கள் சங்கம் மற்றும் ஏனைய நலன்விரும்பிகளால் வழங்கப்பட்டது.

மக்கள் விழிப்புணர்வு

கடந்த ஆண்டில் பொது மக்களை விழிப்புணர்வூட்டம் புதிய நிகழ்ச்சிகளை நடாத்தப்படவில்லை. இருப்பினும், 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நோயாளர் வண்டிகளின் பொருட்டு வீதியில் இடவசதி பெற்றுக்கொள்வதற்காக, விசேட நிபுணத்துவ அன்பளிப்பாளர்களின் நிதியிடலில் "இதோ குரல்- வழிகொடுங்கள்" என்ற நிகழ்ச்சி தொடர்ச்சியாக நடாத்தப்பட்டது.



நிதிசார் செயல்திறன்

கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள்

1990 சுவசெரிய அறக்கட்டளைச் சேவை

2022 திசெம்பர் மாதம் 31 ஆம்
திகதியில் முடிவடையும்
ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள்

1990 சுவசெரிய அறக்கட்டளைச் சேவை பக்கம் 1

திகதியில் நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2022.12.31 ரூபா	2021.12.31 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்	4	1,032,711,371	571,997,088
மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்		1,032,711,371	571,997,088
நடைமுறை சொத்துக்கள்			
பொருட் பதிவேடு	5	54,947,491	57,357,699
முற்பணம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டிய தொகை	6	363,470,864	377,421,345
காசும் காசுக்கு சமமானவைகளும்.	7	845,703,463	481,241,344
மொத்த நடைமுறை சொத்துக்கள்		1,264,121,818	916,020,388
மொத்த சொத்துக்கள்		2,296,833,189	1,488,017,475
நிதி மற்றும் பொறுப்புகள்			
திரட்டிய நிதியம்			
பெயரிடப்பட்ட ஒதுக்கங்கள் - மூலதனம் - இந்திய அரசாங்கத்தால் கிடைக்கப்பெற்ற மானியங்கள்	8	366,170,755	561,417,085
வரையறுக்கப்பட்ட நிதியம் - இந்திய அரசாங்கத்தின் மானியங்கள்	9	679,434,218	813,605,704
பெயரிடப்பட்ட ஒதுக்கங்கள் - மூலதனம் - இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற மானியங்கள்	10	418,940,000	-
மீள்கணிப்பீடு செய்யும் ஒதுக்கம்	11	247,925,000	-
திரட்டிய மிகை / (பற்றாக்குறை)		241,701,344	(51,365,905)
மொத்த திரட்டிய நிதியம்		1,954,171,317	1,323,656,884
நடைமுறையல்லாத பொறுப்புகள்			
ஊழியர் நலன்கள்	12	111,899,625	87,832,625
மொத்த நடைமுறையல்லாத பொறுப்புகள்		111,899,625	87,832,625
நடைமுறை பொறுப்புகள்			
தொடர்புடைய தரப்புகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை	11	-	-
ஏனைய பொறுப்புகள்	13	105,952,247	76,527,967
அரசாங்கத்தின் மூலதன மானியங்கள்	14	124,810,000	-
மேலதிக பற்றின் மீதி	7	-	-
மொத்த நடைமுறை பொறுப்புகள்		230,762,247	76,527,967
மொத்த பொறுப்புகள்		342,661,872	164,360,592
மொத்த திரட்டிய நிதியம் மற்றும் பொறுப்புகள்		2,296,833,189	1,488,017,475

பக்க இலக்கம் 05 - 15 வரையுள்ள குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுகளில் கட்டாயமான அம்சமாகும்.

இந்த நிதிக் கூற்றுகள் இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட, இலாபம்பெறாத அமைப்புகளின்

.....
தலைமை நிதி அதிகாரி

.....
தலைமை நிறைவேற்று அதிகாரி

இந்த நிதிக் கூற்றுகள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பவற்றுக்கு பணிப்பாளர் சபை பொறுப்பு கூறுகின்றது. சபையின் பொருட்டு ஒப்பமிடப்பட்டுள்ளது.

.....
தலைவர் / பணிப்பாளர்

.....
பணிப்பாளர்

2023 பெப்ருவரி 24
கொழும்பு

1990 சுவசெரிய அறக்கட்டளைச் சேவை

பக்கம் 2

விரிவான வருமானம் தொடர்பான கூற்று	குறிப்பு	முடிவடையும் ஆண்டுக்காக ரூபா	முடிவடையும் ஆண்டுக்காக ரூபா
தொழில்பாட்டு வருமானம்			
கிடைக்கப்பெற்ற வளங்கள்	15	2,183,887,447	2,105,294,975
மொத்த தொழில்பாட்டு வருமானம்		2,183,887,447	2,105,294,975
தொழில்பாட்டு செலவினம்			
நேரடி செலவினம்	16	(1,964,369,430)	(1,959,096,604)
நேரடியற்ற செலவினம்	17	(277,683,545)	(274,740,032)
மொத்த தொழில்பாட்டு செலவினம்		(2,242,052,975)	(2,233,836,636)
தொழில்பாட்டு செயற்பாடுகளின் தேறிய மிகை/ (பற்றாக்குறை)		(58,165,528)	(128,541,661)
ஏனைய வருமானம்			
ஏனைய செயற்பாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம்	18	346,466,537	73,233,050
நிதிசார் வருமானம்	19	4,766,240	3,942,706
மொத்த ஏனைய வருமானம்		351,232,777	77,175,756
ஆண்டுக்கான நிகர மிகை / (பற்றாக்குறை)		293,067,249	(51,365,905)

பக்க இலக்கம் 05 தொடக்கம் 15 வரை உள்ள குறிப்புகள் இந்தக் கூற்றுகளில் முக்கியமான அம்சமாகும்.

திரட்டிய நிதியத்தின் மாற்றங்கள் தொடர்பான கூற்று

	விதிக்கப்பட்ட ஒதுக்கம் - மூலதனம் - இந்திய அரசிடமிருந்து கிடைக்கப்பற்ற மானியங்கள்	வரையறுக்கப்பட்ட நிதியம் -இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியங்கள்	பெயரிடப்பட்ட ஒதுக்கம்- மூலதனம் - இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறும் மானியங்கள்	மீள்கணிப்பீட்டு ஒதுக்கம்	திரட்டிய மிகை ∴(பற்றாக்குறை)	மொத்தம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2021 சனவரி 01 ஆம் திகதியில் மீதி	743,467,107	932,975,592		-	-	1,676,442,699
ஆண்டில் பயன்படுத்திய நிதியம்	-	(57,294,975)	-	-	-	(57,294,975)
சொத்துக்களை அகற்றும்போது ஒதுக்கம் - காசாக்குதல்	(8,076,234)	-	-	-	-	(8,076,234)
ஆண்டில் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் சேர்த்தல், மற்றம்	53,814,473	(53,814,473)		-	-	-
ஆண்டில் ஏனைய மாற்றங்கள்	-	(8,260,441)	-	-	-	(8,260,441)
தேய்மானம் காரணமாக நிதியத்தின் - காசாக்கல்	(227,788,260)	-		-	-	(227,788,260)
ஆண்டுக்கான பற்றாக்குறை	-	-	-	-	(51,365,905)	(51,365,905)
2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி	**561,417,085**	**813,605,704**	-	-	**(51,365,905)**	**1,323,656,884**
ஆண்டில் பயன்படுத்திய நிதி	-	(126,116,537)	-	-	-	(126,116,537)
சொத்துக்களை அகற்றும் போது ஒதுக்கம் - காசாக்கல்	(637,936)	-	-	-	-	(637,936)
ஆண்டில் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை சேர்த்தல், மற்றம் மாற்றம் செய்தல்	8,054,949	(8,054,949)	418,940,000	-	-	418,940,000
தேய்மானம் காரணமாக நிதியத்தின் - காசாக்கல்	(201,803,376)	-	-	-	-	(201,803,376)
மோட்டார் வாகனங்களில் மிகை - மீள்கணிப்பீடு செய்தல்	-	-	-	247,065,033	-	247,065,033
மீள்கணிப்பீடு மீது காசாக்கல்- மேற்கொள்ளப்படாத ஒதுக்கம்	(859,967)	-	-	859,967	-	-
ஆண்டுக்கான நிகர மிகை / (பற்றாக்குறை)	-	-	-	-	293,067,249	293,067,249
2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி	**366,170,755**	**679,434,218**	**418,940,000**	**247,925,000**	**241,701,344**	**1,954,171,317**

பக்க இலக்கம் 05 தொடக்கம் 15 வரையில் உள்ள குறிப் குறிப் குறிப்புகள் , இந்த நிதிக் கூற்றுகளில் கட்டாயமான அம்சமாகும்.

1990 சுவசெரிய அறக்கட்டளைச் சேவை பக்கம் 4

காசுப் பாய்ச்சல் கூற்று

	குறிப்பு	2022.12.31 முடிவடையும் ஆண்டுக்காக ரூபா	2021.12.31(முடிவடையும் ஆண்டுக்காக ரூபா
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்கள்			
தேறிய மிகை / பற்றாக்குறை		293,067,249	(51,365,905)
மிகை / (பற்றாக்குறை) தேறிய காசுப் பாய்ச்சலுடன் ஒப்பிடுவதற்கான சீராக்குதல்கள்			
பணம் அல்லாத உருப்படிகள்			
தேய்மானம்	4	214,442,103	229,466,695
மீள்கணிப்பீடு செய்த காசாக்கல் மேற்கொள்ளப்படாத ஒதுக்கம்	11	859,967	-
ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள்	12	24,967,000	26,025,875
சொத்துக்களை அகற்றும்போது ஒதுக்கங்களை- காசாக்குதல்	18	637,936	8,076,234
செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழில்பாட்டு மிகை		533,974,255	212,202,899
செலுத்தப்பட்ட ஓய்வூதிய பணிக்கொடை	12	(900,000)	(550,000)
செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தேறிய தொழில்பாட்டு மிகை		533,074,255	211,652,899
செயற்பாட்டு மூலதன சீராக்கல்			
(அதிகரிப்பு) / கழித்தல்:			
பொருட் பதிவேடு	5	2,410,207	(19,199,735)
முற்பணம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டிய பணத்தொகை	6	13,950,481	55,839,807
செலுத்தப்பட வேண்டிய - ஏனைய	13	29,424,281	10,988,976
வரையறுக்கப்பட்ட நிதி - புதிய நோயாளர் வண்டிகளுக்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து மூலதன மானியங்கள்	14	124,810,000	-
தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட / (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்		703,669,225	259,281,947
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட / (பயன்படுத்திய) காசுப்பாய்ச்சல்			
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல்	4	(29,979,290)	(55,660,053)
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட /(பயன்படுத்திய) தேறிய பணவோட்டம்		(29,979,290)	(55,660,053)
நிதி செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட / (பயன்படுத்திய) பணவோட்டம்			
நிதியக் கணக்கு அதிகரித்தல் /குறைதல்		(309,227,816)	(301,419,910)
நிதி செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட / (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்		(309,227,816)	(301,419,910)
காசும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவடைதல்)		364,462,119	(97,798,016)
காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும்		481,241,344	579,039,360
காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும்	7	845,703,463	481,241,344

பக்க இலக்கம் 5 தொடக்கம் 15 வரையிலான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுகளில் கட்டாயமான அம்சமாகும்.

1. பொதுவான தகவல்கள்

1990 சுவசெரிய அறக்கட்டளை 2018 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க சட்டம் பிராகரம் பாராளுமன்றத்தின் அதிகாரங்களுக்கமைவாக 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி தாபிக்கப்பட்டுள்ளது.

1990 சுவசெரிய அறக்கட்டளையானது, 1307 ஊழியர்களைக் கொண்டு நாடு முழுவதும் இலவசமாக மருத்துவமனை சிகிச்சைகளுக்கான அவசர நோயாளர் வண்டி சேவைகளை வழங்குகின்றது. அறக்கட்டளையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் பிரதான வியாபார நிலையம் இலக்கம் 415, கோட்டை வீதி, ராஜகிரிய என்ற இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், நாடு முழுவதும் 295 அமைவிடங்களில் காணப்படுகின்றன.

2. தயாரிக்கும் அடிப்படை

2.1 இணக்கம் தொடர்பான கூற்று

2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் காலப்பகுதிக்காக நிதி நிலைமை தொடர்பான கூற்று, விரிவான வருமானக் கூற்று, திரட்டிய நிதிகளின் மாற்றங்கள் தொடர்பான கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன், கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தால் வழங்கிய இலாபம் பெறாத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் தொடர்பான இலங்கை கூற்றுக்கு (SL SoRP – NPOs) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

2.2 அளவிடுதலுக்கான அடிப்படை

நிதிக் கூற்றுகள், அவற்றின் நியாயமான பெறுமதிகளால் வெளிப்படுத்துகின்ற கடனீட்டுப் பத்திரங்கள் மற்றும் நிதி உபகரணங்கள் தொடர்பில் தவிர்ந்த, வரலாற்று செலவுகளை அடிப்படையாகக்கொண்டு யதாரிக்கப்படுகிறது.

2.3 செயற்பாட்டு மற்றும் சமர்ப்பிக்கும் நாணயம்

நிதிக் கூற்றுகள் இலங்கை ரூபாக்களைக் கொண்டு சமர்ப்பிக்கப்படுகின்றன.
இது அறக்கட்டளையின் செயற்பாடுகள் மற்றும் சமர்ப்பிக்கும் நாணயமாகும்.

2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களை உபயோகப்படுத்தல்

இலாபம் பெறாத அமைப்புகளின் பொருட்டு பரிந்துரைக்கப்பட்டுள்ள நடைமுறைகள் தொடர்பான இலங்கை கூற்றுக்கு (SL SoRP – NPOs) அமைவாக, நிதிக் கூற்றுகளை தயாரிக்கையில் முகாமைத்துவம் கணக்கீட்டு கொள்கைகளை உபயோகிப்பதற்கும் அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்களுக்கு ஏதுவாக அமையும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் அத்துடன் அனுமானங்களை மேற்கொள்ளுதல் அவசியமாகும். உண்மையான பெறுபேறுகள் குறித்த மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் வலுவிலுள்ள அனுமானங்கள் தற்போதுள்ள அடிப்படையின் ஆய்வு செய்யப்படுகிறது. மதிப்பீடுகளை திருத்தம் செய்யப்படுகின்ற காலப்பகுதியில் கணக்கீட்டு மதிப்பீடுகளில் திருத்தங்களை அடையாளம் காணப்படுகின்றன. திருத்தங்கள் எதிர்கால காலப்பகுதிக்கு பாதிப்புகளை ஏற்படுத்துமாயின் அத்தகைய திருத்தங்கள் எதிர்காலங்களில் அடையாளம் காணப்படும்.

நிதிக் கூற்றுகளில் அடையாளம் காணப்பட்ட அளவுகளின் மீது மிக முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்துகையில், மதிப்பீடு செய்தல், நிச்சியமற்ற தன்மை மற்றும் முக்கியமான தீர்ப்புகள் தொடர்பிலான முக்கியமான துறைகளின் தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- குறிப்பு 4 – சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்
- குறிப்பு 12 – ஊழியர் நலன்கள்

2.5 கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள்

கணக்கீட்டு கொள்கைகளை வேறு வகையில் வெளிப்படுத்தாதுவிட்டாலும், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவை முன்னரான ஆண்டுடன் இணங்குகின்றன.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்பு)

3. கவனத்தில் கொள்ள வேண்டிய கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம்

3.1 வெளிநாட்டு நாணய மாற்றம்

வெளிநாட்டு நாணய மாற்றங்கள், மாற்றங்களை மேற்கொள்கின்ற திகதிகளில் (spot exchange rate) நிலவும் மாற்று விகிதங்களைப் பயன்படுத்தி அந்தந்த நிறுவனத்தின் செயல்பாட்டு நாணயமாக மாற்றப்படுகிறது. அத்தகைய பரிவர்த்தனைகளை தீர்க்கப்படுதல் காரணமாகவும் ஆண்டு இறுதி அந்நியச் செலாவணி விகிதங்களின் கீழும் காசுப் பொருட்களின் மீள்-அளவீடு ஆகியவற்றின் விளைவாக அந்நியச் செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் விரிவான வருமான கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளன.
வரலாற்றுச் செலவில் அளவிடப்படும் காசல்லாத பொருட்கள் மீள மாற்றப்படுவதில்லை. நியாயமான மதிப்பில் அளவிடப்படும் காசல்லாத பொருட்கள், நியாயமான மதிப்பு நிர்ணயிக்கப்பட்ட தேதியில், காணப்படும் மாற்று விகிதங்களுக்கமைவாக மாற்றப்படுகின்றன.

3.2 காசும் காசுக்கு சமமானவைகளும்

முன்னராக அறியக் கூடியதான இலகுவாக காசாக்குவதற்கு முடியுமான மற்றும் மதிப்பீடுகளில் மாற்றத்தின் சிறிதளவிலான இடர் நிலைக்கு உட்படும் அதிக திரவ முதலீடுகள் அதாவது, குறுகியகால முதலீடுகள், கையிருப்பு பணம் என்பவற்றைக்கொண்டு காசும் காசுக்கு சமமானவைகளும் அமைந்திருக்கும்.
காசுப் பாய்ச்சல் கூற்றில் நோக்கங்களுக்காக காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் கையிருப்பு பணம், வைப்புகள் மற்றும் தேறிய வங்கி மேலதிக பற்றுகள் என்பவற்றைக் கொண்டமைந்திருக்கும்.
காசுப் பாய்ச்சல் கூற்றில் நேரடியல்லாத முறைகளை பயன்படுத்தப்பட்டுள்ளன.

3.3 நிதிசார் உபகரணங்கள்

நிதிச் சொத்துக்கள்

நிதிசார் சொத்துக்கள் பின்வரும் தொகுதிகளுக்கு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஊடாக நியாயமான பெறுமதிகளுடன் கூடிய நிதிசார் சொத்துக்கள், முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளப்படும் நிதிசார் சொத்துக்கள் கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய பணம், விற்பனைக்குள்ள நிதிசார் சொத்துக்கள்.

இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஊடாக நியாயமான பெறுமதிகளைக் கொண்ட நிதிசார் சொத்துக்கள்

இலாபம் மற்றும் நட்டங்களின் ஊடாக நியாயமான மதிப்பில் உள்ள நிதிச் சொத்துக்கள், விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும் எந்தவொரு விளைபயன் மற்றும் இலாபம் அல்லது நட்டத்துடன் நடைமுறை சொத்துகளாக வகைப்படுத்தப்படும்.
பட்டியலிடப்பட்ட கடனீட்டு பத்திரங்களின் நியாயமான மதிப்பானது, அறிக்கையிடப்பட்ட தேதியில் அவற்றின் மேற்கோள் காட்டப்பட்ட விலைமனு விலையாகும். நிதி வருமானம் முக்கியமாக வட்டி மற்றும் நியாயமான மதிப்பில் ஏற்படும் மாற்றங்களில் நிகர கிடைக்கப்பெற்ற மற்றும் கிடைக்கப்பெறாத வருமானங்களைக் கொண்டுள்ளது. சொத்தின் பயனுள்ள நலன்களை கவனத்தில் கொண்டு, வட்டி வருமானம் திரட்டிய அடிப்படையில் அடையாளம் காணப்படுகிறது.

கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகள்

முதலாவதாக, கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகளை, அவை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து அடையாளம் காணப்படுகிறது. ஏனைய எல்லா நிதிச் சொத்துக்களையும் சந்தை திகதியில் அடையாளம் காணப்படுகிறது. அதாவது அறக்கட்டளையானது, சம்பந்தப்பட்டவைகளின் பொருட்டு உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஒரு தரப்பாக மாறும் திகதியாகும். முடங்கும் இழப்புகளை ஈடுசெய்வதற்காக நிலுவை பணத் தொகை மீதான கொடுப்பனவில் அவர்களது நிகர செலவினமாக கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிதிசார் பொறுப்புகள்

நிதி பொறுப்புகளில் மன்றத்தால், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு செலுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிதிசார் பொறுப்புகள் முதலாவதாக அடையாளம் காணப்படுவது கொடுக்கல்வாங்கல் மேற்கொண்ட விலைக்கு ஆகும். அடிப்படை குறிப்புகளை வைத்த பின்னர், அவற்றை அளவிடப்படுவது கடன்தீர்ப்பு முறையிலாகும். இந்த நிதியாண்டில் செலுத்தப்பட வேண்டிய எந்தவொரு தரப்புகளையும் நாம் அடையாளம் காணப்படவில்லை.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்பு)

3. கவனத்தில் கொள்ள வேண்டிய கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம்

3.3 நிதிசார் கருவிகள் (தொடர்பு)

நிதிசார் சொத்துக்களின் முடங்கும் இழப்புகள்

முடங்கும் இழப்புகள் உள்ளனவா என்பது தொடர்பாக தீர்மானிப்பதற்காக, அறிக்கையிடும் ஒவ்வொரு திகதியிலும் அவற்றின் ஆற்றல் பெறுமதி ஆய்வு செய்யப்படும். நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் சொத்துக்கள் கூட்டாக முடங்கும் இழப்புகள் உள்ளனவா என்பதற்கு புறநிலை வலுவான சாட்சிகள் உள்ளனவா என்பது தொடர்பாக அறக்கட்டளை மதிப்பீடு செய்யும். நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்கள் கூட்டாக முடங்கும் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கவனத்தில் கொள்ளப்படுவது, சொத்து அல்லது சொத்துகளாக அடையளாம் காணப்பட்டதன் பின்னர் (incurred loss model) ஒரு நிகழ்வு அல்லது மேற்பட்டவைகளின் பயனாக ஏற்படும் இழப்பு தொடர்பாக புறநிலை சாட்சிகள் வலுவாக இருத்தலும், குறித்த இழப்புகள் காரணமாக நிதிசார் சொத்துக்களில் அல்லது நம்பகரமானதாக மதிப்பிட முடியுமான நிதிசார் சொத்துகளில் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலுக்கு தாக்கங்களை ஏற்படுத்தினால் மட்டுமே ஆகும்.

3.4 பொருட் இருப்புகள்

காலாவதியான மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு உரிய கொடுப்பனவுகளை செய்த பின்னர், பொருட் இருப்புகளை உண்மையான செலவின அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

3.5 சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

3.5.1 முறையாக குறிப்பு வைத்தல் மற்றும் அளவிடல்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் குறைந்து செல்லும் திரண்ட தேய்மானத்தில் அளவிடப்படும். சொத்துக்களின் கையகப்படுத்தலுக்கு நேரடியாக காரணமாகும் செலவுகள் செலவினத்தில் அடங்கும்.

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் போன்ற பொருட் பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் மாறுப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் உள்ளவிடத்து, அத்தகைய பகுதிகள் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் புறம்பான பொருட்களாக (பிரதான கூறுகளாக) கணக்கிடப்படும்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றம் உபகரணங்கள் அகற்றும்போது இலாபங்கள் மற்றும் நட்டங்கள், அகற்றப்படுவதன்மூலம் கிடைக்கப்பெறுகின்ற வருமானம், சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றம் உபகரணங்களில் முன்கொண்டுச் செல்கின்ற பெறுமதிகளுடன் ஒப்பிடப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுவதன்மூலம் தீர்மானிக்கப்படும்.

3.5.2 பிற்கால செலவினங்கள்

பிற்கால செலவினங்கள் மூலதனமயப்படுத்தல் மேற்கொள்ளப்படுவது, அது சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் அதிகரித்தால் மட்டுமே ஆகும். ஏனைய எல்லா செலவினங்களும் விரிவான வருமானக் கூற்றில் மேற்கொண்ட செலவினமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

3.5.3 மீண்டும் மதிப்பிடல்

மீண்டும் மதிப்பிடும் திகதியில் அதன் நியாயமான பெறுமதியில் பிற்கால திரட்டிய தேய்மானங்களை கழித்த பின்னர் நியாயமான பெறுமதியை நம்பகமாக அளப்பதற்கு முடியுமான சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண பொருட்களை மீள மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கொண்டு வருதல் வேண்டும். ஏதேனும் சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீண்டும் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தியவுடன், அத்தகைய சொத்துக்களின் மொத்த தொகுதியும் மீண்டும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். நியாயமான பெறுமதி மற்றும் ஆற்றல் பெறுமதி என்பவற்றுக்கிடையில் வேறுபாடு உள்ளவிடத்து, நியாயமான பெறுமதி அதன் ஆற்றல் பெறுமதியிலும் பார்க்க பொருட் ரீதியாக மாற்றம் ஏற்படாதென சான்றுப்படுத்துவதற்காக, தொழில்சார் ரீதியாக தகைமைகளைப் பெறுகின்ற மதிப்பீட்டாளரால் மோட்டார் வாகனங்களுக்காக மீண்டும் மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

மீண்டும் மதிப்பிடல் காரணமாக கொண்டுச் செல்கின்ற பணத் தொகையின் அதிகரிப்பை, மீண்டும் மதிப்பிடலின் மிகை என்ற தலைப்பின் கீழ் திரட்டிய நிதியத்தில் வரவு வைக்கப்படும். எவ்வாறெனிலும், அது விரிவான வருமானக் கூற்றில் முன்னராக குறிப்பு வைக்கப்பட்டுள்ள, குறித்த சொத்தின் மீள் மதிப்பீட்டின் பற்றாக்குறை மீள் மாற்றியமைக்கும் தொகைக்கு அதிகரித்தலானது, விரிவான வருமானக் கூற்றில் முறையாக குறிப்பிடப்பட்டுள்ளது. அகற்றப்பட்டதன் பின்னர், விற்பனை செய்கின்ற குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களுக்கு ஏற்புடையதான எந்தவொரு மீள் மதிப்பீடு செய்யப்பட்ட மிகை விரிவான வருமானக் கூற்றில் மாற்றப்படும்.

3. கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம் (தொடர்பு)
3.5 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் (முன்னரான பக்கத்தில்)
3.5.4 தேய்மானம்

ஏற்படைய சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தையும் பார்க்க straight-line method அடிப்படையில் எல்லா சொத்துக்களினதும் தேய்மானம் மேற்கொள்ளப்படும். அதேபோன்று சொத்துக்களின் தேய்மானமானமானது குறித்த சொத்துக்கள் பயன்படுத்தும் போதே மேற்கொள்ளப்படும். குறித்த சொத்துக்கள் விற்பனைக்காக வகைப்படுத்தியுள்ள திகதி மற்றும் சொத்துக்களை ஏற்றுக்கொள்ளப்படாத திகதியில் அவற்றின் தேய்மானம் நிறுத்தப்படும். தேய்மானம் மாதாந்த அடிப்படையில் கணக்கிடப்படுவதுடன், கொள்வனவு செய்த மாதம் பொருட்டு முற்றுமுழுதாக அறவிடப்படும். சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் பின்வரும் வகையிலாகும்.

சொத்து வகை	ஆண்டுகளின் எண்ணிக்கை
மோட்டார் வாகனங்கள்- 1 கட்டம் (2022 செப்தெம்பர் 30 வரை)	06 ஆண்டுகள்
மோட்டார் வாகனங்கள் - கட்டம் 2 மற்றும் 3	06 ஆண்டுகள்
தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள்	04 ஆண்டுகள்
தளபாடங்கள் மற்றும் துணை கருவிகள்	08 ஆண்டுகள்
மருத்துவ உபகரணங்கள்	08 ஆண்டுகள்
மென்பொருட்கள்	05 ஆண்டுகள்
கருவிகள்	05 ஆண்டுகள்
அலுவலக உபகரணங்கள்	05 ஆண்டுகள்

கட்டம் 1 மோட்டார் வாகனங்கள் 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் மீண்டும் மதிப்பிடப்பட்டுள்ளதுடன், குறித்த மோட்டார் வாகனங்களில் எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுட்காலம் பின்வரும் வகையில் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சொத்துக்களின் வகை	ஆண்டுகளின் எண்ணிக்கை
15 மோட்டார் வாகனங்கள்	**5 ஆண்டுகள்**
61 மோட்டார் வாகனங்கள்	**6 ஆண்டுகள்**
05 மோட்டார் வாகனங்கள்	**7 ஆண்டுகள்**
04 மோட்டார் வாகனங்கள்	**8 ஆண்டுகள்**

3.5.5 அன்பளிப்புச் செய்த சொத்துக்கள்

வரையறுக்கப்பட்ட நிதி ஊடாக கருத்திட்டமொன்றில் ஒரு பகுதியாக சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்கையில், கருத்திட்டம் முடிவுற்றவுடன் சொத்துக்களை பயன்பெறுநருக்கு ஒப்படைக்காதுவிட்டால் அல்லது ஆரம்ப அன்பளிப்பாளருக்கு மீண்டும் வழங்கப்படாதுவிடின், கருத்திட்டம் முடிவடைந்த பின்னர் சொத்து மதிப்பீடு செய்வதுடன், மூலதன ஒதுக்கம் ஊடாக சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் நிதி கூற்றுகளுக்கு கொண்டு வரப்படும். அத்தகைய சொத்துக்களின் தேய்மானம் ஒதுக்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும். தேய்மானத்தின் நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கும் பொருட்டு மதிப்பிடப்பட்ட திகதியாக கொள்வனவு செய்த திகதி கருதப்படும்.

3.5.6 சொத்துக்களின் முடங்கும் இழப்புகள்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், குறித்த சொத்துக்களில் நட்டங்கள் ஏற்பட்டுள்ளதா என்று அடையாளம் காணுவதற்கு சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படும். சொத்தின் ஆற்றல் பெறுமதி அதன் அறவிடும் தொகையை விட விஞ்சுகின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் முடங்கும் இழப்பு அடையாளம் காணப்படும். விரிவான வரமானக் கூற்றில் முடங்கும் இழப்பு அடையாளம் காணப்பட்டுள்ளது. அறவிட முடியுமான தொகையை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தும் மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பின், முடங்கும் இழப்பு மீள மாற்றப்படுவதுடன், எந்தவொரு முடங்கும் இழப்பையும் அடையாளம் காணதவிடத்து சொத்தின் ஆற்றல் பெறுமதியானது தேய்மானம் அல்லது தேய்மானங்களில் நிகர தொகைபடி தீர்மானிக்க முடியுமான ஆற்றல் பெறுமதியை கொண்டிருக்கும்.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்பு)

3. கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம் (தொடர்பு)

3.6 ஊழியர் நலன்கள்

3.6.1 குறித்துரைக்கப்பட்ட நலன்கள் திட்டம்

உறுதியான நன்மைத் திட்டம் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தைத் தவிர வேலைவாய்ப்புக்குப் பின்னரான நன்மைத் திட்டமாகும். உறுதியான நலன்கள் தொடர்பில் கம்பெனியின் நிகர பொறுப்புகள், தற்கால மற்றும் முன்னரான காலங்களில் ஊழியர்கள் அவர்களின் சேவைக்காக உழைத்துள்ள எதிர்கால நலன்களின் அளவை மதிப்பீடு செய்வதன் மூலம் ஒவ்வொரு திட்டம் பொருட்டும் வெவ்வேறாக கணக்கிடப்படும்
அறக்கட்டளையால் கணக்கிடல் வருடாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. ஊழியர் நலன்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன்படி அனைத்து ஊழியர்களுக்கும் சேவையில் முதலாவது ஆண்டு தொடக்கம் ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவு பொருட்டு நிதிக் கூற்றுகளில் ஏற்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் படி, ஊழியரிடம் செலுத்தும் பொறுப்பு 05 ஆண்டு தொடர்ச்சியான சேவைக்காலத்தின் பின்னர் ஏற்படுகின்றது.
பொறுப்பு வெளியக நிதியங்கள் மூலம் நிதியிடல் மேற்கொள்ளப்படும்.

3.6.2 குறித்துரைக்கப்பட்ட நலன்கள் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

குறித்துரைக்கப்பட்ட பங்களிப்பு திட்டம் என்பது வேலைவாய்ப்புகளுக்கு பின்னரான நலன்கள் திட்டம் என்பதுடன், அதன்கீழ் நிறுவனம், புறம்பான நிறுவனத்திடம் நிலையான பங்களிப்புத் தொகை செலுத்துவதுடன், மேலதிகமாக பணம் செலுத்துவதற்கு சட்டத்துடனான பொறுப்பு இல்லை. எல்லா ஊழியர்களும் உள்ளடங்கும் வகையில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் பொருட்டு பங்களிப்பு வழங்குவதற்கான பொறுப்புகள் இலாபம் அல்லது நட்டமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
அறக்கட்டளையால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு பங்களிப்புத் தொகையாக ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 12% மற்றும் 3% என்ற வகையில் பங்கிளப்புச் செய்யப்படுகிறது.

3.7 நிதியம் /ஒதுக்கங்கள் கிடைக்கப்பெறுவனவைகளும் பயன்படுத்திய கணக்கீடுகளும்

ஒதுக்கங்கள்

ஒதுக்கங்கள் வரையறுக்கப்பட்ட அல்லது பெயரிடப்பட்ட என்ற வகையில் ஒதுக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

அ) குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கம் / நிதியம்

குறித்துரைக்கப்பட்ட பணிக்காக அறக்கட்டளையால் பெயரிடப்பட்ட வரையறுக்கப்படாத நிதியங்களை அடிப்படையாகக்கொண்ட நிதியம் குறித்துரைக்கப்பட்ட நிதியங்களாக அடையாளம் காணப்படும். இந்த நிதியம் பயன்படுத்த முடியுமான செயற்பாடுகளாக நிதிக் கூற்றுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.
அடையாளம் காணப்பட்ட கருத்திட்டம் அல்லது மூலதன இயல்பிலான ஒரு செயற்பாடுகளின் பயன்பாட்டுக்காக சொத்துக்கள்/நிதி கிடைக்கப்பெறுமாயின், அத்தகைய சொத்துக்கள் மற்றும் குறித்த நிதியங்களில் கொள்வனவு செய்கின்ற சொத்துக்கள் பெயரிடப்பட்ட ஒதுக்கம் - மூலதன கணக்கில் மாற்றப்படும்.

ஆ) வரையறுக்கப்பட்ட ஒதுக்கம் / நிதியம்

அடையாளம் காணப்படும் கருத்திட்டம் அல்லது செயற்பாட்டின் பயன்பாட்டுக்காக நன்கொடைகள் கிடைக்கப்பெறுகின்றவிடத்து, குறித்த நிதி வரையறுக்கப்பட்ட நிதியத்தின் கணக்கில் வைத்துக்கொண்டு, குறித்த அடையாளம் காணப்பட்ட கருத்திட்டத்தின் பொருட்டு மேற்கொண்ட செலவினத்துடன், சீராக்குவதற்கு விரிவான வருமானக் கூற்றுக்கு மாற்றப்படும். பயன்படுத்தப்படாத நிதியம் அவர்களின் ஏற்புடைய நிதியக் கணக்கில் வைத்துக்கொண்டுள்ளதுடன், அவை தேவைப்படும் வரை நிதிநிலைமை தொடர்பான கூற்றின் திரட்டிய நிதியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
இந்த வரையறுக்கப்பட்ட நிதி பயன்படுத்த முடியுமான மற்றும் பயன்படுத்துகின்ற செயற்பாடுகள் நிதிக் கூற்றுகளின் குறிப்புகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இ) மீண்டும் மதிப்பிடும் ஒதுக்கம்

மீண்டும் மதிப்பிடப்படும் ஒதுக்கம், சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மீள் கணிப்பீட்டு பெறுமதியைக் கொண்டமைந்திருக்கும்.

3. கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம் (தொடர்பு)

3.8 மானியங்கள் மற்றும் நன்கொடைகள்

நிதிக் கூற்றுகளில் நன்கொடைகள் மற்றும் மானியங்கள் அவற்றின் நியாயமான பெறுமதி மீது ஏற்றுக்கொள்ளப்படும். நன்கொடைகள் மற்றும் மானியங்கள் செலவினங்களுக்கு ஏற்புடையதாகுமிடத்து, அதனை முறையான அடிப்படையில் பதிலீடு செய்வதற்கு கருதுகின்ற செலவினங்களுடன் அதனை சீராக்குவதற்கு தேவையான காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளம் காணப்படும்.

சொத்துக்களுக்கு ஏற்புடையதான நன்கொடைகள் மற்றும் மானியங்கள் பொதுவாக நிதி நிலைமை தொடர்பான கூற்றிலிருந்து பிற்போடப்படுவதுடன், சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீது விரிவான வருமானக் கூற்றில் வரவு வைக்கப்படும்.

3.9 வருமானம் அடையாளம் காணுதல்

3.9.1 பங்களிப்பு / வருமானங்களின் மூலங்கள்

வரையறுக்கப்பட்ட நிதியங்களிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுவது எவ்வாறெனில், நிதி கிடைக்கப்பெறுதலின் அனைத்து நிபந்தனைகளுக்கமைவாக பணியாற்றியுள்ளதாக சான்றளித்துள்ளவிடத்தும், பதிலீடு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற உரிய செலவினம் விரிவான வருமானக் கூற்றில் மேற்கொண்டுள்ள மற்றும் அறவிடப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்

அத்தகைய நிதி பயன்படுத்தும் அடிப்படையில் சட்டரீதியான உரித்துகள் உள்ளவிடத்து ஏனைய அனைத்து வருமானங்களையும் அடையாளம் காணப்பட்டு அளவுகளை கணக்கிடலாம்.

3.9.2 வருமானம்

உழைக்கும் வட்டி திரண்ட அடிப்படையில் அடையாளம் காணப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அகற்றும்போது, நிகர இலாப, நட்டங்கள், கிடைக்கப்பெறும் வருமானம், அகற்றப்பட்ட பொருட்களின் ஆற்றல் பெறுமதி மற்றும் அதற்கு ஏற்புடையதான எந்தவொரு விற்பனை செலவினங்களையும் குறைக்கப்பட்டதன் பின்னர் விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும். அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மூலதன ஒதுக்கத்திலிருந்து அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மூலதன ஒதுக்கத்தில் விரிவான வருமானக் கூற்றில் மாற்றப்படும். மீண்டும் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பில், மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்க கணக்கில் எஞ்சியுள்ள எந்தவொரு விரிவான வருமானக் கூற்றில் மாற்றப்படும்.

ஏனைய வருமானம் திரண்ட அடிப்படையில் அடையாளம் காணப்படும்.

3.10 செலவினங்களை அடையாளம் காணுதல்

அறக்கட்டளையின் தொழிற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது, அவற்றின் செலவினம், அவற்றை மேற்கொள்கின்ற காலப்பகுதியில் விரிவான வருமானக் கூற்றில் அயைடாளம் காணப்பட்டுள்ளது. அறக்கட்டளை நிருவகிக்கும் போதும் பராமரிக்கையிலும் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மறுசீரமைப்பின்போதும், பேணுகையிலும் எதிர்பார்க்கின்ற மட்டத்தில் செயலாற்றுவதற்கு மேற்கொள்கின்ற ஏனைய செலவினங்கள் திரண்ட அடிப்படையின் மீது கணக்கு வைக்கப்பட்டு விரிவான வருமானக்கூற்றிற்கு அறவிடப்படும்.

1990 சுவசெரிய அறக்கட்டளைச் சேவை பக்கம் 11

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்பு)

குறிப்பு - 4 - சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

குறிப்பு 4.1 - சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

	2022.01.01 ஆம் திகதியில் மீதி	சேர்த்தல்	மீள்கணிப்பீடு	அகற்றல் ∴ பிறமாற்றங்கள்	2022.12.31 ஆம் திகதியில் மீதி
செலவினம் ∴ மதிப்பீடு	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம் 1	214,387,289	-	247,065,033	(213,527,322)	247,925,000
மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம்2 மற்றும்3)	780,599,997	400,440,000	-	-	1,181,039,997
தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள்	136,510,496	447,310	-	(2,084,267)	134,873,539
தளவாடங்கள் மற்றும் கருவிகள்	31,908,860	544,105	-	-	32,452,965
மருத்துவ உபகரணங்கள்	185,360,024	20,398,236	-	(1,663,597)	204,094,663
மென்பொருள்	17,511,041	6,601,851	-	(159,343)	23,953,548
கருவிகள்	7,676,382	233,458	-	(32,770)	7,877,070
அலுவலக உபகரணங்கள்	9,143,684	64,330	-	-	9,208,014
	1,383,097,773	428,729,290	247,065,033	(217,467,299)	1,841,424,796

	2022.01.01 ஆம் திகதியில் மீதி	ஆண்டுக்கான கட்டணம்	தள்ளுபடி	அகற்றல்கள்	2022.12.31 ஆம் திகதியில் மீதி
செலவினம் ∴மதிப்பீடுகள் மீது தேய்மானம்	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம் 1	194,958,455	28,922,334	(213,527,322)	-	10,353,467
மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம்2 மற்றும்3)	424,870,872	130,100,000	-	-	554,970,872
தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள்	80,347,436	22,098,151	(2,084,267)	-	100,361,320
தளவாடங்கள் மற்றும் கருவிகள்	19,039,910	4,029,522	-	-	23,069,432
மருத்துவ உபகரணங்கள்	73,831,449	23,391,818	(106,708)	(928,785)	96,187,774
மென்பொருள்	12,172,990	2,443,643	(159,343)	-	14,457,290
கருவிகள்	3,775,996	1,622,980	-	(22,939)	5,376,037
அலுவலக உபகரணங்கள்	2,103,576	1,833,655	-	-	3,937,232
	811,100,685	214,442,103	(215,877,640)	(951,724)	808,713,424

	2022.12.31 ஆம் திகதியில் மீதி	2021.12.31 ஆம் திகதியில் மீதி
செலவினம்/மதிப்பீடுகளின் மீது சொத்துக்களின் தேறிய புத்தக பெறுமதி	ரூபா	ரூபா
மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம் 1	237,571,533	19,428,834
மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம்2 மற்றும்3)	626,069,125	355,729,125
தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள்	34,512,218	56,163,059
தளவாடங்கள் மற்றும் கருவிகள்	9,383,533	12,868,950
மருத்துவ உபகரணங்கள்	107,906,889	111,528,575
மென்பொருள்	9,496,258	5,338,051
கருவிகள்	2,501,033	3,900,386
அலுவலக உபகரணங்கள்	5,270,782	7,040,108
	1,032,711,371	571,997,088

குறிப்பு 4.2 - மோட்டார் வாகனங்களை சேர்த்தல்

அறக்கட்டளையிடம் நிதி அமைச்சின் இணக்கத்துடன், நிதிசார் உடன்படிக்கையின் கீழ் 25 டொயோடா நோயாளர் வண்டிகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், குத்தகை தவணைகள் தேசிய வரவு செலவு திணைக்களத்தால் செலுத்தப்படுகிறது. எல்லா நோயாளர் வண்டிகளும் 1990 சுவசெரிய அறக்கட்டளையின் கீழ் பதிவு செய்து உண்மையான உரிமையாளராக இலங்கை வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நோயாளர் வண்டிகளை மீள் ஒழுங்கமைக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், முன்பகுதி பிரிவுகளின் விற்பனை விலை ரூபா. 15,950,000 ஆகும். நோயாளர் வண்டிகள் மீள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன், ஒட்டுமொத்த செலவினம் பின்வருமாறாகும்.

	2022.12.31
	ரூபா
25 டொயோடா நோயாளர் வண்டிகளின் விலை	398,750,000
நோயாளர் வண்டிகளின் மீள் ஒழுங்கமைக்கப்பட்ட செலவினம்	1,690,000
ஆண்டு இறுதியின் மீதி	400,440,000

25 புதிய டொயோடா நோயாளர் வண்டிகடிகளின் பொருட்டு கொள்வனவு செய்த நோயாளர் தூக்குப் படுக்கைகள் (Stretchers) இன் விலை ரூபா18,500,000 என்று மருத்துவ உபகரணங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பு 4.3 - மோட்டார் வாகனங்களை மீள் மதிப்பீடு செய்தல்

குறிப்பு 4.3.1 - கட்டம் 1 மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்) 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் சுயாதீன தொழில்சார் மதிப்பீட்டாளரான Gamut Ceylon Valuers (Pvt.) Ltd ஆல் தற்போது பயன்படுத்துகின்ற அறக்கட்டளையின் பொருட்டு திறந்த சந்தை பெறுமதிக்கமைவாக மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டது. திறந்த சந்தை பெறுமதி முறை சமமான அல்லது ஒப்பிடுவதற்கு முடியுமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் சந்தையின் கொடுக்கல்வாங்கல் ஊடாக, உருவாக்கப்பட்ட விலை கணக்குகள் மற்றும் ஏனைய ஏற்புடைய தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1990 சுவசெரிய அறக்கட்டளைச் சேவை பக்கம் 12

நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்புடையதாகும்)

குறிப்பு 4.3 • மோட்டார் வாகனங்களின் மீள்கணிப்பீடு (தொடர்புடையதாகும்)

குறிப்பு 4.3.2 - மீள்கணிப்பீடு செய்த மோட்டார் வாகனங்களில் தேறிய புத்தகப் பெறுமதி விலை மாதிரிகளுக்கமைவாக அடையாளம் காணுவதற்கு முடியுமாக இருந்தது.

	2022.12.31	2021.12.31
	ரூபா	ரூபா
திகதியில் செலவினம்	214,387,289	214,387,289
திரட்டிய தேய்மானம்	(213,527,322)	(194,958,455)
திகதியில் தேறிய புத்தகப் பெறுமதி	859,967	19,428,834

குறிப்பு 4.3.3 - 2022 ஆண்டுக்காக மீள்கணிப்பீடு செய்த மோட்டார் வாகனங்களின் தேய்மானக் கட்டணங்கள் பின்வரும் வகையிலாகும்.

	2022.12.31 முடிவடையும் ஆண்டுக்காக
சனவரி 2022 - செப்தெம்பர் 2022	18,568,867
ஒக்டோபர் 2022 - திசெம்பர் 2022	10,353,467
கட்டம் 1 நோயாளர் வண்டிகளின் தேய்மானக் கட்டணங்கள்	28,922,334

	2022.12.31	2021.12.31
	ரூபா	ரூபா
குறிப்பு 5 • பொருட் பதிவேடு		
மருந்துகள், மற்றும் மருத்துவ நுகர்வுப் பொருட்கள் • (குறிப்பு) (அ)	53,528,106	55,080,593
எழுதுகருவி பொருட்கள் மற்றும் துப்பரவேற்பாட்டு பொருட்கள்	1,419,385	2,277,106
	54,947,491	57,357,699

குறிப்பு (அ) : பெறுமதி, நாடு பூராகவும் விநியோகிக்கப்படுகின்ற 295 நோயாளர் வண்டிகளுக்காக மருந்து, மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள், நுகர்வுப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏற்புடைய பொருட்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற ரூபா. 11,194,053 பெறுமதியான நுகர்வு பொருட்கள் இதற்குள் அடங்குகின்றது.

குறிப்பு 6 • முற்பணம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகள்		
பாதுகாப்பு வைப்புகள்	9,817,250	9,810,250
முற்பணம் (குறிப்பு) (ஆ)	23,915	5,653,212
முன்செலுத்தல்கள் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய தொகை	23,538,172	31,866,357
இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டியவைகள் (குறிப்பு 6.1)	330,091,526	330,091,526
	363,470,864	377,421,345
குறிப்பு 6.1- இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டியவைகள்		
ஆண்டு ஆரம்பத்தில் மீதி	330,091,526	405,224,284
இலங்கை அரசாங்கத்திடமிருந்து ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதி	-	(62,201,514)
இந்திய அரசாங்கத்தின் அளிப்புகள் • வரையறுக்கப்பட்ட நிதியத்திடம் மாற்றப்பட்ட (குறிப்பு 9)	-	(12,931,244)
ஆண்டு இறுதியில் மீதி	330,091,526	330,091,526

குறிப்பு (ஆ) : அறவிட முடியுமான முற்பணம் செலுத்தல் ரூபா. Vive Solution- India இடம் 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 2,545,753.67, 2022 இல் நிதிக் கூற்றுகளிலிருந்து பதிவழிக்கப்பட்டது.

குறிப்பு 7 • காசும் காசுக்கு சமமானவைகளும்		
இலங்கை வங்கி • இல.ரூபா கணக்குகள்	168,585,557	19,793,364
இலங்கை வங்கி அ.டொலர் கணக்கு	677,117,906	461,447,980
	845,703,463	481,241,344
குறிப்பு 8 பெயரிடப்பட்ட ஒதுக்கங்கள் • மூலதனம் இந்திய அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கப்பெறுகின்ற மானியங்கள்		
ஆண்டு ஆரம்பத்தில் மீதி	561,417,085	743,467,107
வரையறுக்கப்பட்ட நிதியத்தால் மாற்றம் செய்யப்பட்ட • இந்திய அரசாங்கத்தின் மானியங்கள் (குறிப்பு 09)	8,054,949	53,814,473
சொத்தக்களின் அகற்றலின் போது ஒதுக்கத்தின் • காசாக்கல் (குறிப்பு 18)	(637,936)	(8,076,234)
மீள்கணிப்பீடு செய்தலின் மீது காசாக்கப்படாத ஒதுக்கம் (குறிப்பு 11)	(859,967)	-
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் தேய்மானம்	(201,803,376)	(227,788,260)
ஆண்டு இறுதியின் மீதி	366,170,755	561,417,085

1990 சுவசெரிய அறக்கட்டளைச் சேவை பக்கம் 13

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்பு)

	2022.12.31 ரூபா	2021.12.31 ரூபா
குறிப்பு 9 - வரையறுக்கப்பட்ட நிதியம் - இந்திய அரசாங்கத்தின் மானியங்கள்		
ஆண்டு ஆரம்பத்தின் மீதி	813,605,704	932,975,592
ஆண்டில் ஏனைய மாற்றங்கள்	-	4,670,803
ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி இந்திய - மானியம் (குறிப்பு ஊ)	-	-
இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டியவைகள் மாற்றப்பட்டுள்ளன. (குறிப்பு 6.1)	-	(12,931,244)
பெயரிடப்பட்ட ஒதுக்கங்களிடமிருந்து மாற்றப்பட்ட மூலதனம் - இந்திய அரசாங்கத்தின் மானியங்கள் (குறிப்பு - 8)	(8,054,949)	(53,814,473)
விரிவான வருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்டுள்ள (குறிப்பு 15)	(126,116,537)	(57,294,975)
ஆண்டு இறுதியின் மீதி	679,434,218	813,605,704
குறிப்பு 10 - பெயரிடப்பட்ட ஒதுக்கம் - மூலதனம் - இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய மானியங்கள்		
ஆண்டு ஆரம்பத்தின் மீதி	-	-
நன்கொடையாக கிடைக்கப்பெற்ற நோயாளர் வண்டிகளை சேர்க்கப்படுதல்	398,750,000	-
வரையறுக்கப்பட்ட நிதியத்திலிருந்து மாற்றப்படுகின்ற - புதிய நோயாளர் வண்டிகளுக்காக இலங்கை அரசாங்கத்தின் மூலதன மானியங்கள் (குறிப்பு 14)	20,190,000	-
ஆண்டு இறுதியின் மீதி)	418,940,000	-
குறிப்பு 11 - மீள்கணிப்பீட்டு ஒதுக்கம்		
ஆண்டு ஆரம்பத்தின் மீதி	-	-
மோட்டார் வாகனங்களின் மிகை மீள்கணிப்பீடு	247,065,033	-
மீள்கணிப்பீடு மீது காசாக்கப்படாத ஒதுக்கம் (குறிப்பு ஐ)	859,967	-
ஆண்டு இறுதியின் மீதி	247,925,000	-

குறிப்பு (ன) :முதலாவது கட்டத்தில் ரூபா. 859,967 ஆன மோட்டார் வாகனங்களின் மீள்கணிப்பீடு மீது காசாக்கப்படாத ஒதுக்கங்கள் மூலதன ஒதுக்கங்கள் ஊடாக சொத்துக்கள், பொறித்தொகுதிகளின் மற்றும் உபகரணங்களின்கீழ் நிதிக் கூற்றுகளிடம் முதலாவதாக கொண்டு வரப்பட்டு, மீள்கணிப்பீடு செய்த சொத்துக்களின் தேறிய புத்தகப் பெறுமதிக்கமைவாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், குறித்த சொத்துக்களுக்கு ஏற்புடையதான வருடாந்த தேய்மானம் அந்த ஒதுக்கத்திற்கு எதிராக அறவிடப்பட்டுள்ளது.

குறிப்பு 12 - ஊழியர் நலன்கள்		
ஆண்டு ஆரமப்த்தின் மீதி	87,832,625	62,356,750
விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்ட செலவினம்	24,967,000	26,025,875
ஆண்டில் மேற்கொண்ட செலவினம்	(900,000)	(550,000)
ஆண்டு இறுதியின் மீதி	111,899,625	87,832,625
குறிப்பு 13 - ஏனைய செலுத்தப்பட வேண்டிய		
நியதிச்சட்ட கணக்காய்வு கட்டணம்	200,000	390,800
செலுத்தப்பட வேண்டிய பிடிபணம் (குறிப்பு (ஈ)	-	3,711,837
ஊழியர் சேமலாப நிதியம்	1,461,101	1,540,499
ஊழியர் சேமலாப நிதியம்	9,740,675	10,269,992
செலுத்தப்பட வேண்டிய மேன்பொருள் கட்டணம்	1,000,000	1,937,415
திரண்ட செலவினம்	10,471,974	17,315,586
செலுத்தப்பட வேண்டிய ஏனைய வழங்குநர்கள் மற்றும் கடன் கொடுநர்கள்	83,078,496	41,361,838
	105,952,247	76,527,967

குறிப்பு (ஈ) : வழங்குநர்கள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த பணம் பொருட்டு உரித்து கோராத படியால், 2022 நிதிக் கூற்றுகளில் ஏனைய வருமானமாக ஏற்றுக்கொண்டுள்ள ரூபா. 3,711,837 - பிடிபணமாக வைத்துக் கொள்ளப்பட வேண்டிய மீதிகள்

குறிப்பு 14 - வரையறுக்கப்பட்ட நிதி - புதிய நோயாளர் வண்டிகளுக்கான இலங்கை அரசாங்கத்தின் மூலதன மானியங்கள்		
ஆண்டு ஆரம்பத்தின் மீதி	-	-
புதிய 25 நோயளார் வண்டிகளை மீள்ஒழுங்கமைப்பதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல் என்பவற்றுக்கு கிடைத்துள்ள நிதி	145,000,000	-
பெயரிடப்பட்ட ஒதுக்கங்களிடம் மாற்றப்பட்ட மூலதனம் - இலங்கை அரசாங்கத்தின் மானியங்கள் (குறிப்பு 10)	(20,190,000)	-
ஆண்டு இறுதியின் மீதி	124,810,000	-

	2022.12.31 முடிவடையும் ஆண்டுக்காக ரூபா	2021.12.31 முடிவடையும் ஆண்டுக்காக ரூபா
குறிப்பு 15 - மனித வளங்கள்		
இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதியத்திற்கு எதிராக அடையளாம் காணப்பட்ட வருமானம்	2,044,120,000	2,048,000,000
இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற மருந்து, மருந்து மற்றும் மருத்துவ நுகர்வு பொருட்களுக்கு புறம்பாக அடையாளம் காணப்பட்ட வருமானம்	13,650,910	-
இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறும் மானியங்களுக்கு புறம்பாக அடையாளம் காணப்பட்ட வருமானம் (குறிப்பு 09)	126,116,537	57,294,975
	2,183,887,447	2,105,294,975

1990 சுவசெரிய அறக்கட்டளைச் சேவை பக்கம் 14

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

	2022.12.31 முடிவடையும் ஆண்டுக்காக ரூபா	2021.12.31 முடிவடையும் ஆண்டுக்காக ரூபா
குறிப்பு 16 - நேரடி செலவினம்		
நோயாளர் வண்டிகளின் ஒக்சிஜன் செலவினம்	2,422,228	2,343,523
நோயளார் வண்டி வழங்குதல்	96,194,986	260,394,005
பதவியணி சம்பளம்	600,004,963	622,047,122
ஊழியர் சேமலாப நிதியம்	72,000,596	74,645,655
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்	18,000,149	18,661,414
மேலதிக கொடுப்பனவு	429,967,103	534,691,858
சுற்றுலா மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	89,802,104	43,358,501
எரிபொருள் செலவினம்	369,627,694	173,466,383
NTB கழிவு	1,890,446	-
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு	204,247,370	168,840,849
பதவியணி சீருடை	1,312,118	7,097,405
வாகனங்களின் காப்புறுதி	47,159,469	25,637,563
தொலைபேசி கட்டணங்கள்	31,740,204	27,912,328
	1,964,369,430	1,959,096,604
குறிப்பு 17 நேரடியற்ற செலவினம்		
வர்த்தக அறிவிப்பு செலவினம் (குறிப்பு (உ)	1,626,822	10,601,516
வங்கி கட்டணங்கள்	310,172	423,445
மின்சார கட்டணங்கள்	5,152,481	5,000,727
எரிபொருள் கார்ட் வாடகைக்கு வழங்குதல்	415,380	356,760
எரிபொருள் செலவினம் ஏனைய	4,705,001	2,082,756
பொதுவான நிருவாக செலவினம்	81,631	114,698
காப்புறுதி ஊழியர்களின் நட்டஈடு	713,723	707,809
தனிப்பட்ட விபத்து காப்புறுதி	2,122,256	2,180,421
இணையத்தள மற்றும் ரூபாவாகினி செலவினம்	46,450,972	29,065,835
சட்டத்துடனான கட்டணங்கள்	272,500	325,250
உள்நாட்டு சுற்றுலா மற்றம் போக்குவரத்து செலவினம்	42,279,027	42,418,997
தங்குமிட, உணவு மற்றும் குடிபானம் செலவு	1,004,940	1,089,500
தேய்மானம்	12,638,728	1,904,835
அலுவலக துப்பரவேற்பாட்டு செலவினம்	1,428,837	1,938,475
அலுவலக பராமரிப்பு மற்றும் ஏனைய அலுவலக செலவினம்	1,042,176	1,023,231
சேவை கட்டணங்கள்	1,873,890	1,609,845
அஞ்சல் கட்டணம் மற்றும் குரியர் செலவினம்	318,077	172,842
அச்சீட்டு மற்றும் எழுதுகருவி பொருட்களின் செலவினம்	1,451,315	1,204,671
கணக்காய்வு கட்டணங்கள்	192,600	129,800
தொழில்சார் கட்டணங்கள்	28,369,188	27,863,965
வாடகை செலவினம்	19,482,704	18,356,577
பாதுகாப்பு கட்டணங்கள்	4,056,928	3,573,109
மென்பொருள் கட்டணங்கள்	6,474,671	5,271,413
பதவியணி ஆட்சேர்ப்புச் செலவினம்	5,342,433	1,835,750
பதவியணி நலனோம்பல் செலவினம் மற்றும் அலுவலக நுகர்வுப் பொருட்கள்	3,480,039	62,702,938
GPS செலவினம்	7,911,910	7,776,450
தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஏற்புடைய செலவினம் - ஆண்டு பராமரிப்பு செலவினம்	1,527,532	1,544,546
அலுவலக மறுசீரமைப்பு செலவினம்	-	681,962
பதவியணி ஒய்வூதிய பணிக்கொடை	24,967,000	26,025,875
வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பதவியணிக்கான செலவினம்	43,314,093	7,613,702
நடைமுறை மற்றும் துணைக் கருவிகளின் பராமரிப்பு	3,237,200	5,026,300
முத்திரைக் கட்டணங்கள்	72,156	236,606
நீர் கட்டணங்கள்	243,429	158,508
இலத்திரனியல் உபகரணங்களின் காப்புறுதி	211,259	99,399
உபகரணங்களின் பராமரிப்பு	1,432,412	536,300
தீ காப்புறுதி - வியாபார வளாக காப்புறுதி	296,373	195,760
வழங்குநர்களின் முற்பணம் பதிவழித்தல் (குறிப்பு ஆ)	2,545,754	-
நிலையான சொத்துக்களை அகற்றலின் நட்டம் (குறிப்பு 20.1)	637,936	2,889,458
	277,683,545	274,740,032

குறிப்பு (உ) : விளம்பர செலவினங்கள்- பத்திரிக்கை அறிவிப்புகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூபா. 245,560 ம் மற்றும் ஊடக விளம்பரங்களின் பொருட்டு மேற்கொண்ட செலவினங்களில் ரூபா1,626,822ம் உள்ளடக்கப்பட்டுள்ளது. 1990 சுவசெரிய அறக்கட்டளை நிதியத்தில் பத்திரிக்கை அறிவிப்புகளுக்காக பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன், குறித்த ஊடக விளம்பரம் பொருட்டு கிடைக்கப்பெற்ற அன்பளிப்புகளுக்கு பணம் செலத்தப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

குறிப்பு 18 - ஏனைய செயற்பாடுகளில் உழைக்கப்பட்ட வருமானம்

	2022.12.31இல் முடிவடையும் ஆண்டுக்காக ரூபா	2021.12.31இல் முடிவடையும் ஆண்டுக்காக ரூபா
பரிமாற்றத்தின் இலாபம்	338,633,192	43,776,509
தேவையற்ற கழிவுகளை விற்பனை செய்தல் மற்றும் ஏனைய வருமானம்	5,169,362	2,537,815
அன்பளிப்புகள்	2,026,047	13,745,880
நோயாளர் வண்டிகளை அகற்றல் மீதான இலாபம்	-	5,096,612
சொத்துக்களை அகற்றும் போது ஒதுக்கம்- காசாக்கல் (குறிப்பு 20.2)	637,936	8,076,234
	346,466,537	73,233,050

குறிப்பு 19 - நிதிசார் வருமானம்

சேமிப்புக் கணக்கின் வட்டி வருமானம்	4,766,240	3,942,706
	4,766,240	3,942,706

குறிப்பு 20 - சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

குறிப்பு 20.1 - சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அகற்றும்போது நட்டம்

விபரம்	கொள்வனவு செய்த ஆண்டு	செலவினம் ரூபா	திரட்டிய தேய்மானம் ரூப	எழுத்திலான பெறுமதி ரூபா	விற்பனை வருமானம் ரூபா	புத்தக நட்டம் ரூபா
கையில் எடுத்துச் செல்வதற்கு முடியுமான பல்ஸ் ஒக்சிமீற்றர் எண்ணிக்கை 154	2016- எண்ணிக்கை 87, 2018 - எண்ணிக்கை 48, 2019-எண்ணிக்கை 19	1,212,531	697,858	514,673	-	(514,673)
கையில் எடுத்துச் செல்வதற்கு முடியுமான இரத்த அழுத்த மானிகள் -வயது வந்தோர் - எண்ணிக்கை 60	2016	64,004	43,417	20,587	-	(20,587)
கைமுறை உறிஞ்சும் சாதனங்கள் - எண்ணிக்கை 13	2016	32,727	22,200	10,526	-	(10,526)
"நெரசுஅயவஎஉ ஞிடவைஎள - எண்ணிக்கை 61	2016	189,987	128,879	61,109	-	(61,109)
ஏனைய கருவிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் - எண்ணிக்கை 85	2016- எண்ணிக்கை64, 2018- எண்ணிக்கை 21	90,410	59,369	31,041	-	(31,041)
		1,589,659	951,723	637,936	-	(637,936)

குறிப்பு 20.2 - சொத்துக்களை அகற்றும்போது ஒதுக்கங்கள் அறியவருதல்

ரூபா 637,936 ஆன சொத்துக்களின் அகற்றல் மீது ஒதுக்கங்களை அறிந்துக்கொள்ளுதல் - மூலதன ஒதுக்கங்கள் ஊடாக சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் நிதிக் கூற்றுகளுக்கு கொண்டு வரப்பட்டு, அகற்றிய சொத்துக்கள் மீது பதிவழிக்கப்பட்ட பெறுமதிக்கமைவாக அடையாளம் காணப்பட்ட அந்த சொத்துக்களுக்கான ஆண்டு தேய்மானங்களை குறித்த சொத்துக்களுக்கு எதிராக அறவிடப்பட்டுள்ளது.

குறிப்பு - 21 மூலதன பொறுப்புகள்

நிதிக் கூற்றுகளுக்கான வெளிப்படுத்தல்களுக்கு தேவையான பிரதான மூலதன பொறுப்புகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

குறிப்பு 22 - நிச்சயமற்ற பொறுப்புகள்

நிதிக் கூற்றுகளுக்கான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் தேவையான நிச்சயமற்ற பொறுப்புகள் எதுவும் இல்லை

குறிப்பு 23 - ஐந்தொகை திகதியில் பின்னர் நிகழ்வுகள்

நிதிக் கூற்றுகளுக்கான வெளிப்படுத்தல்கள் தேவையான ஏனைய நிகழ்வுகள் எதுவும் ஐந்தொகை திகதியில் பின்னர் ஏற்படவில்லை.

நிதிநிலை அறிக்கை தொடர்பான தலைமை கணக்காய்வாளரின் அறிக்கை

எனது எண்: MED/B/1990SF/01/2022/46 உங்கள் எண்: திகதி : 04 மே 2023

பணிப்பாளர்,
1990 சுவசெரிய மன்றம்

1990 சுவசெரிய மன்றத்தின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுகள்

1.1 அபிப்பிராயம்

1990 சுவசெரிய மன்றத்தின் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154 (6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

மன்றத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் நோக்கமாக கொள்ளாத அமைப்புகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராய அடிப்படையில

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3 சுவசெரிய மன்றத்தின் 2022 ஆம் ஆண்டில் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் என்னிடம் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றவை நிறுவனத்தின் சுவசெரிய மன்றத்தின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து, வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக போதுமான அளவு பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதலாகும்.

மன்றத்தின் 2022 வருடாந்த அறிக்கை வாசிக்கும்போது அதில் போதுமான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று நான் முடிவு செய்தால், செவ்வையாக்குவதற்கு நிருவகிக்கப்படுகின்ற பிரிவுகளிடம் தொடர்பாடல் செய்தல் வேண்டும். மேலும் செவ்வையாக்கப்படாது தவறாக காண்பிக்கப்பட்டிருந்தால், அவற்றை அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுகள் இலாபம் நோக்கமாக கொள்ளாத, அமைப்புகளின் பொருட்டு பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய தவறான அறிக்கைகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையான பொருத்தமான உள் கட்டுப்பாடுகளைத் நிர்ணயிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்குப் பரிந்துரைக்கப்படும் கணக்கியல் நடைமுறைகளுக்கு இணங்க இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து நியாயமாக வழங்குவதும் மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படும் தவறான பொருத்தமான உள் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர மன்றத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம்

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து தவறான அறிக்கைகளிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் போதுமான அளவு தவறான கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. தவறான அறிக்கைகள், மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அதன் நம்பகத்தன்மை இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது ஒட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் தவறான அறிக்கைகளை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு மன்றத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய போதுமான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்புகொள்கின்றேன்.

2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனம் பேணிச் சென்றிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி மன்றத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி மன்றத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் எவரேனுமொரு உறுப்பினர் மன்றத்துடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு தொடர்புள்ளது என்பது தொடர்பாக,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாத வகையில் மன்றம் செயற்பட்டுள்ளது என்பது தொடர்பாக

சட்டங்கள் தொடர்	விதிகள்.ஃ.ஒழுங்குவிதிகளின்	விபரம்
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை	வவுச்சர்களுக்கு பணம் செலுத்தும் போது பணம் பெறுபவரின் ஆளடையாளம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமாயினும், ரூபா.1,638,491 ஆன 31

	(i)	நிதி ஒழுங்குவிதி 139(5)	வவுச்சர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் வவுச்சர்களில் பணம் பெற்றுக்கொண்டமைக்காக பணம் பெறுபவரின் ஒப்பம் அல்லது பணம் பெற்றுக்கொண்டமைக்காக பற்றுச்சீட்டு காணப்படவில்லை.
	(ii)	நிதி ஒழுங்குவிதி 264 (1)	வவுச்சரில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த தொகை கிடைக்கப்பெற்றமைக்காக, தேவையானவிடத்து பணம் பெற்றுக்கொள்பவர் உரிய வகையில் முத்திரையிடப்பட்டு பற்றுச்சீட்டில் உறுதிப்படுத்த வேண்டுமாயினும், ரூபா.21,895,615 பெறுமதியான 18 வவுச்சர்களின் பொருட்டு அவ்வாறு பற்றுச்சீட்டுகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை.
(ஆ)	2021 நவம்பர் 16 ஆம் திகதி அரச தொழில்முயற்சிகள் திணைக்கள-த்தால் வெளியிடப்பட்டுள்ள அரச தொழில்முயற்சிகளுக்கான தாபன வழிக்காட்டல் கோவை/ கைந்நூல்		
	(i)	வழிகாட்டல் கோவையில் பந்தி 2.3	தேசிய கொள்கை சட்டகத்தில் நிறுவனத்தின் நோக்கங்களை எய்துக்கொள்வதற்காக மூலோபாய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் சபையால் சான்றுப்படுத்தல் வேண்டும். ஆயினும் குறித்த திட்டம், செயற்றிட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டத்துடன் அமைச்சின் செயலாளர் ஊடாக திறைசேரியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமாயினும், மன்றத்தால் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.
	(ii)	வழிகாட்டல் கோவையில் பந்தி 5	மன்றத்தால் வருடாந்த வரவு செலவு பதிவேடு தயாரிக்கையில் இணைப்பு 1 இன் 3 (**a**) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை.
	(iii)	வழிகாட்டல் கைந்நூலில் பந்தி 6.7	நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியம் தொடர்பாக வருடாந்த சொத்துக்களின் ஒப்பாய்வு மேற்கொள்ளுதல் வேண்டுமாயினும், மன்றத்தால் நிலையான சொத்துக்கள் தொடர்பான ஒப்பாய்வு மேற்கொள்ளப்படவில்லை.
(இ)	2014 பெப்ருவரி 17 ஆம் திகதிய PFD/RED/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு சுற்றறிக்கையின் பந்தி 04		நீண்டகால தொலைநோக்கத்துடன், ஏற்புடைய சட்டத்தில் நோக்கங்களை எய்துக்கொள்ளும் பொருட்டு தயாரிக்கப்பட்ட ஆண்டு செயற்றிட்டத்தில் (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை
(ஈ)	தாபனவிதிக் கோவையில் XIV அத்தியாயத்தில் பிரிவு 9.1		தாபன விதிக்கோவையில் ஏற்பாடுகளின் பிரகாரம், ஒரு அலுவலருக்கு ஒரு கிலோ மீற்றர் பொருட்டு ரூபா.2.00 ஆன மைல் கூலி செலுத்த முடியுமாயினும், குறித்த ஏற்பாடுகளுக்கு முரணாகவும், தாபன பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட முறையான அனுமதியற்ற, நோயாளர் வண்டி சேவைகளின்

மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக மாவட்ட மட்டத்தில் நிலைப்படுத்தியிருந்த மேற்பார்வை அலுவலர்களுக்கு, களப் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக தமது சொந்த மிதிவண்டியை பயன்படுத்துவதற்கும், அதற்காக மன்றத்தால் ஒரு கிலோமீற்றருக்கு ரூபா. 23 தொடக்கம் ரூபா.48 வரை பல்வேறு 7 ரேட்களின் கீழ் கொடுப்பனவு செய்வதற்கும் பணிப்பாளர் சபையின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதன்படி 2022 ஆம் ஆண்டில் 191 சந்தர்ப்பங்களில் 295,400 கிலோ மீற்றர்களின் பொருட்டு ரூபா.2,787,851 ஐ செலுத்தப்பட்டிருந்தது.

(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 133 மற்றும் 2019 சனவரி 12 ஆம் திகதி DMA/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை

ஒழுங்குறுத்தல் சபைக்காக உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப்படவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயலாற்றப்பட்டுள்ளது என்பது தொடர்பாக

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தவில்லை என்பது தொடர்பாக

2.3 ஏனைய விடயங்கள்

(அ) தேசிய வரவு செலவு திணைக்களத்தால் நிதி குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு 2021 திசெம்பர் 30 ஆம் திகதி மன்றத்திடம் வழங்கியிருந்த 25 நோயாளர் வண்டிகளை பயன்படுத்துவதற்கு, மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், இந்த நோயாளர் வண்டிகளை குறித்த மன்றத்தால் வழங்கப்படும் சேவைகளுக்கு பொருந்துகின்ற வகையில் மேம்படுத்தும் நடவடிக்கைகளை முடிவுறுத்தாமை காரணமாக வழங்குநர் ஒருவரின் வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் 1,992 ஆயினும், அன்றைய திகதியில் உண்மையான ஊழியர்கள் 1,307 ஆகும். அதன்படி பதவியணியின் பற்றாக்குறை 685 ஆனதுடன், அவர்களுக்கிடையில் 321 பேர் நோயாளர் வண்டி சாரதிகளாவார்கள்.

(இ) மேல் மட்ட முகாமைத்துவ பதவியான (Head of Finance) பதவிக்காக அலுவலர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை பிரகாரம், குறித்த நேர்முகப் பரீட்சையின் பரந்துரைகள் மீது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் உள்ளடங்காத நிதி ஆலோசகராக அலுவலர் ஒருவரை 06 மாத காலம் பொருட்டு 2021 ஆம் ஆண்டு செப்தெம்பர் 02 ஆம் திகதி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. அதற்காக

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை. நியமனம் செய்கின்ற நிபந்தனைகளுக்கமைவாக மேலும் 06 மாத காலம் பொருட்டு மட்டும் நீட்டிக்க முடியுமாயினும், 2023 ஏப்ரல் 19 திகதி வரை மேலதிகமாக 06 மாத காலம் அவரது ஒப்பந்தக் காலம் நீட்டிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று நிதி மற்றும் வழங்கல் முகாமையாளர் பதவிக்கான அலுவலருக்கும் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரை ஓராண்டு காலம் தகுதிகாண் காலத்திற்கு அமைவாக பதில் கடமையாற்றும் நிதி பிரதானி பதவிக்காக தரமுயர்வு வழங்கப்பட்டிருந்ததுடன், நியமனம் மேற்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைவாக குறித்த அலுவலரால் நிதி பிரதானி பதவிக்கு தேவையான தகைமைகள் ஓராண்டு காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்தல் வேண்டுமென்பதுடன், தகுதிகாண் காலம் 03 மாதங்கள் வரை நீட்டிக்கலாம். ஆயினும் முறையான அனுமதியின்றி குறித்த அலுவலர் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியிலும் நிதிப் பிரதானி பதவியில் பதில் கடமையாற்றுவதனை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி சுகாதார அமைச்சு மற்றும் தனியார் கம்பெனியுடன் மேற்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை அத்துடன், 2018 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க 1990 சுவசெரிய மன்றச் சட்டத்தில் அ 26 (இ) பிரிவு பிராகரம், சுவசெரிய மன்றத்தின் தொழில்பாட்டு நடவடிக்கைகளின் பொருட்டு செலவிடும் மீண்டுவரும் செலவினம் அரசாங்கத்தால் மீளளிப்புச் செய்தல் வேண்டுமாயினும், 2022 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதியிலும் காணப்பட்ட 330,091,526 ஆன தொகை மீளாய்விற்கான ஆண்டிலும் மீளளிப்புச் செய்யப்படவில்லை. அதேபோன்று 2019 ஆம் ஆண்டுக்காக அரசாங்கத்தால் மன்றத்திடம் வழங்கிய நிதி ஒதுக்கீடு 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஒழுங்கு முறையில் 25%, 50% மற்றும் 75% வரை குறைப்பதற்கு 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானித்திருந்ததுடன், நிதி ஒதுக்கீடுகளைக் குறைத்த பின்னர் மன்றத்தால் பராமரிப்பதற்கு பிரேரணை சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், அத்தனையை பிரேரணை 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், இந்த நிலைமை மன்றத்தின் தொடர்ச்சியான நிலைப்பாடு மீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.293,067,249 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரெதிராக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா.51,365,905 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.344,433,154 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு மன்றத்தின் வெளிநாட்டு நாணய நிதி கணக்கில் பரிமாற்ற பெறுமதி அதிகரித்தல் பிரதான காரணமாக காணப்பட்டது.

கையெழுத்து தெளிவாக இல்லை
டப்லியூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி



ANNUAL REPORT 2022